

பி. ஸ்ரீ.

51. கரு நெருப்பும் வெண்ணெருப்பும்

விளக்கேற்றும் நேரத்திலே தோழிமார் இரத்தின தீபங்களால் இரவைப் பகலாக்கி விட்டார்களாம் கன்னிமாடத்திலே. அதே சமயம் தங்க மயமான ஓர் அமிர்த கலசம் போல் உதயமாகி விட்டான் சந்திரன் சமுத்திரத்திலே. விரைவில், கீழ்த்திசையின்மீது மங்களமாக வைத்த ஒரு பூர்ண வெள்ளிக் கும்பம் போலக் காண்கிறது சந்திரபிம்பம். இத்தகைய சந்திரோதயக் காட்சியை எத்தனையோ தரம் கண்டு களித்திருக்கிறாள் சீதை.

இதயக் கொதிப்பு


'இருளை நக்கி நிமிரும்' நிலாக் கதிர்களை எத்தனையோ தினங்களில் எவ்வளவு புதுமையாக அனுபவித்திருக்கிறாள் சீதை, கன்னியுள்ளத்தோடும், கவி யுள்ளத்தோடும்! ஆனால் இன்றோ அந்தக் காட்சியை,

ஓங்கா நின்ற இருளாய்வந்(து)
உலகை விழுங்கி, மென்மேலும்
வீங்கா நின்ற கருநெருப்பின்
இடையே, எழுந்த வெண்ணெருப்பே!

[ஓங்கா நின்ற — ஓங்குகின்றன. வீங்கா நின்ற — வீங்குகிற; அதாவது, அதிகப் படுகிற.]

என்று எவ்வளவு ஆத்திரமாகவும் கொடுமையாகவும் குறிப்பிடுகிறாள்!

நெருப்பின் நிறம் சிவப்பு என்பது குழந்தைகளும் அறிந்ததே. சீதையின் குழந்தையுள்ளமோ செந்நெருப்போடு கருநெருப்பும் வெண்ணெருப்பும் உண்டோ என்று சந்தேகிக்க வில்லை; 'உண்டு' என்றே சித்தாந்தம் செய்து விடுகிறது! அந்த இருட்டும் அவ்வளவு கொடுமையாக இருக்கிறது; அந்தச் சந்திரிகையும் அவ்வளவு கொடுமையாகத் தோன்றுகிறது காதலிக்கு. "கரு நெருப்பின் இடையே எழுந்த வெண்ணெருப்பே!" என்று சீதை உதய



சந்திரனை அழைப்பது இதயச்
கொதிப்பை அப்படியே வெளிப்
படுத்துகிறதல்லவா ?

வெண்ணிலாவும் வெண்புகழும்

காதலியின் மன நிலை இப்
படியிருக்க, கம்பனுடைய குழக்
தையுள்ளமோ "அந்தச் சந்திர
னுடைய நிலையில் மாறுதல்
ஒன்றுமில்லை ; அந்த வெண்



ணிலவு வழக்கம்போல் இருளையெல்லாம் விழுங்கி மண்ணையும் விண்ணையும்
திசைகளையும் விழுங்கிப் பிரகாசிக்கிறது, உலக சிரேஷ்டர்களான மஹோப
காரிகளின் மகத்தான புகழ் போலே" என்று உறுதி கூறுகிறது :

வன்ன மாலைக் கைபரப்பி,
உலகை வளைந்த இருளெல்லாம்
உன்ன எண்ணித் தண்மதியத்(து)
உதயத் தெழுந்த நிலாக்கற்றை,

விண்ணும் மண்ணும் திசைஅனைத்தும்
விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்தன்
புகழ்போல் எங்கும் பரந்துளதால்.

[வண்ணம்—நிறம். தண்மதியம்—குளிர்ச்சியுடைய சந்திரன். கற்றை—தொகுதி; திரள். விரிநன்னீர் — விரிந்த நல்ல நீர்வளம். பண்ணைவெண்ணெய்—வயல்சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூர்.]

சந்திரோதயமானதும் இருளுக்கிடையே நிலாக் கதிர்கள் பரவி வரும் இயற்கை-அதிசயத்தைக் கவிஞன் பார்த்துப் பார்த்து அனுபவித்திருக்க வேண்டும். ஒரு பகாசுரனோ, ஒரு கும்பகர்ணனோ தன் சிவந்த கைகளை விரித்து ...ட்ட அகப்பட்டதை யெல்லாம் சுருட்டி விழுங்குவது போல், வெண்ணிலவும் ...ருந்திமாலை என்ற செந்நிறக் கைகளைப் பரப்பி, இருளோடு விண்ணையும் மண்ணையும் திசைகளையும் விழுங்கி நிலவுகிறதாம்,—லோகோபகாரியரான சடையப்...ன் புகழ் போலே.

ஒப்பற்ற வள்ளலும், பரம ரஸிகனும், தன் ஆருயிர்த் தோழனுமாகிய சடையப்பனைத்தான் கம்பன் எப்படி யெல்லாம் கௌரவித்துப் பார்க்கிறான், பாடுகிறான்! ஆசை தீர இந்த நண்பனையும் ராமாயண கதாபாத்திரங்களின் கோஷ்டியிலேயே சேர்த்து விடப் பார்க்கிறானோ? அல்லது இந்தத் தோழனைப் ...போல் ராமாயண கதா பாத்திரங்களையும் அவ்வளவு பிரத்தியக்ஷமாய்ப் பார்த்து ...டுகிறானோ? இது எப்படியானாலும், எவ்வளவு புதுமையாகப் பார்க்கிறான் ...வெண்ணிலவையும், சடையப்பனது அப்பழுக்கில்லாத வெண்புகழையும்! இவ் இரண்டுமே பார்க்கப் பார்க்கப் புதுமைதான், கம்பனது கவி யுள்ளத்திற்கு!

புதுமை, உத்ஸாகம், கொடுமை

சந்திரிகையில் இந்தப் பழைய உலகமும் புதிதாகவே தோன்றுகிறது; ஒவ்வொரு சமயமும் பார்க்குந்தோறும் இப்படியே தோன்றுகிறது. அழுக்கடைந்த பழமையான பொருள்களும் எப்படியோ ஒரு புதுமை அழகு பெற்றுப் பொலிவது போலக் காண்கின்றன. இத்தகைய வெண்ணிலவின் வசீகர சக்தியைத் தான் எவ்வளவு வசிகரமாக வெளியிடுகிறான் கவிஞன்:

நீத்தம் அதனின் மூளைத்தெழுந்த
நெடுவெண் திங்கள் எனும்தச்சன்,
மீத்தன் கரங்கள் அவைபரப்பி
மிகுவெண் ணிலவாம் வெண்சுதையால்,
காத்த கண்ணன் மணிஉந்திக்
கமல நாளத் திடைப்பண்டு,
பூத்த அண்டம் பழையதென்று
புதுக்கு வானும் போன்றுளதால்!

[நீத்தம் - வெள்ளம்; (இங்கே) கடல். நெடுவெண் திங்கள் - பெரிய வெண்ணிறமுள்ள சந்திரன். மீ - மீது; மேலே. கரங்கள் - கிரணங்கள் ...ன்ற கைகள். சுதை - சுண்ணச் சாந்து. கண்ணன் – கிருஷ்ணன்; (இங்கே) மகாவிஷ்ணு. காத்த கண்ணன் - காத்தல் தொழிலையுடைய விஷ்ணு.

மணி உத்திக்கமலம் - அழகிய நாபி கமலம். கமல நாளம் - தாமரைத்தண்டு. இடை - இடையே. பண்டு - பண்டைக் காலத்திலே.]

இந்த அண்டகோளம் எதோ பண்டைக் காலத்திலே தோன்றி, இப்போது பழமைபாகி விட்டதாம். அழுக்கடைந்த பழமையான வீட்டைச் சுண்ணம் படித்துப் புதுப்பிக்கிறார்களல்லவா? அப்படியே இந்த உலகத்தையும் புதுப்பிக்கிறானும் சந்திரன் என்ற சிற்பி; வெண்ணிலவாகிய சுண்ணம்பைத் தன் நீண்ட கிரணக் கைகளால் எங்கும் பூசிப் புதுப்பிக்கிறானும் இந்த அண்டமாகிய பழைய வீட்டை. என்ன உத்ஸாகமான கற்பனை! என்ன உத்ஸாகமான புதுமை - உணர்வு!

சீதைக்கும் இந்த நிலவு புதுமையாகத்தான் இருக்கிறது; ஆனல் உத்ஸாகமாக இல்லை. வெண்சாந்து பூசுவது போலவும் தோன்றவில்லை. வெண்ணெருப்பை வீசுவது போலவே இருக்கிறது. கரு நெருப்போ சிறிது பொழுதிருந்து நீங்கி விட்டது. ஆனல் இந்த வெண்ணெருப்போ நெடுநேரமாக நீங்காது சுடுகிறதாம்.

நிலாக் கதிர்கள் நெஞ்சிலே பட்டதும் பஞ்சணை மெத்தையில் விழுந்து புரளுகிறாளாம், நெருப்பிலே பொருந்திய அன்னம் போலே:

ஓதி மப்பெடை
வெங்கனல் உற்றென,
போது மொய்த்(த) அம
ளிப்புரண் டாளரோ!

[ஓதிமப் பெடை — பெட்டை அன்னம். வெங்கனல் — கொடிய நெருப்பு. உற்றென — உற்றாற் போல; பொருந்ினாற் போல. போது — பூக்கள்; இங்கே செந்தாமரைப் பூக்கள். மொய்த்த — நெருங்கி நிறைந்த. அமளி — படுக்கை.]

ஒரு நெருப்புக்குப் பயந்து வேறொரு நெருப்பில் விழுவதுபோல் இருக்கிறதாம் சீதை படுக்கையில் விழுந்து புரளுவதும். சந்திர காந்தியும் இவளுக்கு நெருப்பின் காந்திதான்; பஞ்சணை மெத்தையில் பரப்பிய செந்தாமரைப் பூக்களும் சிவந்த நெருப்புக் கங்குகள்தான்!

தோழிகள் புதிது புதிதாகப் படுக்கைகளை மாற்றி மாற்றிப் போடுகிறார்கள். எவ்வளவோ சைத்யோபசாரமும் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்: விசிறி கொண்டு வீசுகிறார்கள்; சந்தனத்தை வாரி வாரிப் பூசுகிறார்கள். ஆனல் வீச வீச வெதும்புகிறாளாம்; பூசப் பூச வெதும்பிப் புழுங்குகிறாளாம்:

ஆசை நோய்க்கு
மருந்தும்உண் டாங்கொலோ?

நோய்க்கு மருந்துண்டு; ஆசை நோய்க்கும் மருந்து உண்டா? இந்தக் கேள்விக்கு, 'நோய்தான் மருந்தும் ஆகிறதோ?' என்ற வேறொரு கேள்வியால் தான் பதில் சொல்ல முடிகிறது. மறுபடியும் காதலனைக் காணலாம் என்ற ஆசையினல்தான்; சீதை அந்த ஆசை நோயையும் தாங்கி, உயிரையும் தாங்கிக் கொண்டிருக்கிறாள்.



பி. ஸ்ரீ.

52. இரவும் கழிந்தது

ஸீதையின் கண்வட்டத்திலிருந்து மறைந்துபோன ராமன், தம்பி லக்ஷ்மணனோடும் விச்வாமித்ர முனிவரோடும் அரண்மனைக்குள்ளே போய் ஜனக மகாராஜாவைக் கண்டான். ஜனகன் இவர்களைச் சிறிது தூரத்தில் கண்டதும் சந்தோஷத்துடன் எதிர்கொண்டு உபசரித்து ஒரு வசதியான மாளிகையில் அமரச் செய்தான். அங்கே மகாராஜாவின் புரோகிதரும் அகலிகை புத்திரரும் ஆகிய ஸதானந்த முனிவர் வந்தார். தன்னை வணங்கிய ராமனுக்கு ஆசி கூறிய ஸதானந்தருக்கு விச்வாமித்திரர் ராமனை அறிமுகப் படுத்துகிறார் :

''வடித்த மாதவ !
கேட்டி : இவ் வள்ளல்தான்,
இடித்த வெங்குரல்
தாடகை யாக்கையும்,
அடுத்(து)என் வேள்வியும்,
நின்அன்னை சாபமும்
முடித்(து),என் நெஞ்சத்(து)
இடர்முடித் தான்'' என்றான்.

[வடித்த — திருத்தமாய்ச் செய்த. கேட்டி — கேட்பாய். வெங்குரல்— பயங்கரமான குரல். யாக்கை—உடம்பு. வேள்வி—யாகம். நின்—உன்.].

இந்த ஒரு சிறு பாட்டில் வடித்தெடுத்துத் தருகிறார் விச்வாமித்திரர் இது வரை ராமன் செய்த துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனங்களை. இந்த மஹரிஷியின் நெஞ்சிலே மூன்று துயரங்கள் இருந்தனவாம். தாடகை அநியாயமாக உயிர்களை வதைத்து வருகிறாளே என்பது முதலாவது துயரம். அது உலகத்தைப் பற்றிய கவலை. அடுத்த கவலை தன்னுடைய யாகத்தைப் பற்றியது. இதுவும் தேவர்களின் ப்ரீதிக்காக உலக நன்மையை முன்னிட்டுச் செய்த வேள்விதான். இதற்குச் சமமாக மூன்றாவது கவலையும் இருந்ததாம். "அதுதான் உம்முடைய தாயாரின் துயரக் கதை" என்று ஸதானந்தரை நோக்கிச் சொல்லுகிறார்.

அப்படிச் சொல்லி, "இந்த ராமன்தான் அந்தத் துயரங்களை யெல்லா முடித்துத் தந்த வள்ளல்" என்று அறிமுகப்படுத்தி வைக்கிறார் "தாடகை உடம்பையும், என் வேள்வியையும், உம்முடைய தாயாரின் சாபத்தையு ஒருங்கே முடித்து, என் நெஞ்சத்திலிருந்த மூன்று இடர்களையும் முடித்தான்" என்று சாதுர்யமாகப் பேசுகிறார் விச்வாமித்திரர்.

"முடித்து" என்று, எதுகையில் (பிராசத்தில்) இப்படி வந்து விழுந் இந்தச் சிறு வார்த்தை எவ்வளவு அதிகார தோரணையில் — எவ்வளவு அழுத் மான, உறுதியான, குரலில் — ராமனது துஷ்ட நிக்ரகத்தையும் சிஷ்ட பரிபா னத்தையும் பொருத்திப் பேசுகிறது! ஸாராம்சத்தில் பகவானுடைய அற கருணையும் மறக்கருணையும் ஒன்றுதான் — என்பது குறிப்பு.

"இடித்த வெங்குரல் தாடகை" என்றதும், அந்த ஆர்ப்பாட்டங்களு அட்டகாசங்களும் மறுபடியும் கண்முன்னே நடப்பது போல் ஞாபக திற்கு வருகின்றன அல்லவா? அத்தகைய கொடிய அரக்கி விஷயத்திலு உடம்பைத்தான் முடித்தானும் ராமன், அந்தச் சிறையிலிருந்து அந்த உயிரு விடுதலை பெற்று உய்ந்து போகட்டும் என்ற கருணையோடு.

நிலவு வந்தது

இவ்வளவு நயமாக உட்தணர வைத்துப் பேசிய விச்வாமித்தி மகிஷியின் பூர்வ சரித்திரத்தை ராமனுக்குச் சொல்லி விட் சதானந்தர் தம் இருப்பிடம் சென்றார். இந்தச் சந்திப்பிலும் பேச்சிலு ஸீதையை மறக்க முயன்றான் ராமன். இதற்குள் மாலையும் மாலை மிருளு நீங்கி, நல்ல நிலவு வந்து விட்டது.

விச்வாமித்திரரும் லக்ஷ்மணனும் அந்த மாளிகையில் தாங்கள் படுக்கு இடங்களுக்குப் போய் விட்டார்கள். ராமன் மாத்திரம் தன்னந் தனியனு விழித்துக் கொண்டிருந்தான். `ஏனினும் அவன் தனித்திருக்கவில்லை என் கிறான் கவிஞன் :—

முனியும் தம்பியும்
    மொய்ம் புறை யால்தமக்(கு)
இனிய பள்ளிகள்
    எய்திய பின், இருள் -
கனியும் போல்பவன்,
    கங்குலும் திங்களும் 181
தனியும் தானும்அத்
    தையலும் ஆயினான்.

[மொய்ம்புறை - நெருங்கிய உறவு. பள்ளி - படுக்கை. கங்குல் — இராத் திரி. திங்கள் — சந்திரன். தையல் — பெண்; (இங்கே) ஸீதை.]

ராமன் தம்பியோடும் விச்வாமித்திரரோடும் மூவராக இருந்தானும். ஸத வந்தபோதும் நால்வர்; இப்போது (அவர்கள் இல்லாமலிருந்தும்) இந்த தனிமையிலே ஐவர்! — என்கிறான் கவிஞன். இரவும் சந்திரனும் தனிமை யும் தானும் ஸீதையுமாக ஐவர் என்ற கருத்தை உள்ளிட்டு, "கங்குலு திங்களும் — தனியும் தானும் அத்தையலும் ஆயினான்" என்று கூறம் வாக்கைக் காதலுக்கும் கவிதைக்கும் ஒருங்கே ஒரு மகாவாக்கியம் என் சொல்லலாம்.

" அந்தக் கண்கள்தான் எப்படி மிளிர்கின்றன! கடல் போல் மிளிர்கின்றன ; பாற்கடல்போல் வெள்ள மிடுகின்றன!" என்றெல்லாம் எண்ண மிடுகிறான் ராமன், அந்தக் குளிர்ச்சியிலும் இனிமையிலும் கருமையிலும் ஆழத்திலும் ஈடுபட்டு.

வெள்ளப் பாற்கடல்
    போல்மிளிர் கண்ணினாள்,
அள்ளற் பூமகள்
    ஆதங்கொலோ, என(து) 182
உள்ளத் தாமரை
    யுள்உறை கின்றதே?

[அள்ளற் பூ — சேற்றில் உண்டாகிற தாமரைப் பூ. பூமகள் — லக்ஷ்மி.]

" இந்த உருவம் மஹாலக்ஷ்மியாகவே இருக்கலாமோ?" என்றும் சந்தேகப் படுகிறான். " என் உள்ளத் தாமரையில் வசிக்கிறாளே!" என்கிறான்.



என்ன ஆச்சரியம்! இப்போது வெண்ணிலவும் பொன்னிறமாகத் தோன்
கிறது. பார்க்கும் பொருள்க ளெல்லாம் பொன்முலாம் பூசப் பெற்றன
போல் காண்கின்றன :

பொருளெ லாம்அவள்
பொன் னுரு ஆனவே!

ஆம்; அந்தக் காதலிதான் தன் பொன்மயமான 'அழகு முலாம்' பூசி வி
டாள்!

இந்தப் பிரமிப்புடன் ஸீதையின் பிரமிப்பையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்
" அவர்தம் நீல நிறத்தை எல்லோரும் நினைக்க, அதுவாய் நிரம்பியதோ
மாலையும் மாலையிருளும் ஸீதைக்கு ராமனுடைய நீல நிறத்தை ஞாபகப்படுத்தி
அந்த 'அழகு முலாம்' — அதாவது நீல முலாம் — பூசியது போலிருந்த
வாம் மேலும் மேலும். இவையெல்லாம் காதலின் ரஸவாதம்!

பொருள்களை யெல்லாம் பொன்னிறமாக்கும் காதல் வீசுகிறது ராமன
அகவலகிலே. புறவுலகிலோ வெண்ணிறமாக்கும் பால் நிலா வீசுகிறது. ஆ
ஸீதையின் பொன்னிறம் போல் அந்த வெண்ணிறமும் ராமனை ஹிம்ஸிக்கிற

கொள்ளை கொள்ளக்
கொதித்தெழும் பாற்கடல் —
பள்ள வெள்ளம்
எனப், பட ரும்நிலா :
உள்ள உள்ள
உயிரைத் துருவிட 183
வெள்ளை வண்ண
விடமும்உன் டாங்கொலோ?

[உள்ள உள்ள — நினைக்க நினைக்க. வண்ண விடம்; நிறமுள்
விஷம்.]
என்கிறான் ராமன்.

என்ன அற்புதமான நிலா வர்ணனை முதல் இரண்டடிகளிலும்! நி
வெள்ளத்திலே நீந்தி வந்த கவிதை எனலாம். காதல் - வெள்ளத்திலே பொங்
வரும் நினைவு - வெள்ளத்திற்குப் பொருத்தமான நிலவு வெள்ளம் இது!

நிலவு மறைந்தது

சந்திரனோடு சந்திரிகையும் மறைந்துவிடுகிறது :

வீசு கின்ற
நிலாச்சுடர் வீந்ததால்;
ஈச னும்பதி
ஏகலும், சோகத்தால் 184
பூசு வெண்கல
வைப்புனை சாந்தினை
ஆசை மாதர்
அழித்தனர் என்னவே!

[வீந்தது — அழிந்தது. ஈசன் — நாயகன்; (இங்கே) கணவன். மதி
சந்திரன். கலவைப் புனை சாந்து — அழகிய கலவைச் சந்தனம். ஆசைமாதர்
திசைகளாகிய மாதர்கள்.]

தங்கள் கணவனாகிய சந்திரன் பிரிந்துபோனதும் அவனுடைய ஆசை
உரிய திசைகள் என்ற மனைவியர் பிரிவுத்துயரம் பொறுக்க முடியாமல், தாங்
பூசியிருந்த வெண்ணிறமுள்ள அழகிய கலவைச் சந்தனமாகிய சந்திரிகை
அழித்துவிடுகிறார்களாம். சந்திராஸ்தமனம் ஆகிறது; இரவும் கழிந்தது.



பி. ஸ்ரீ.

53. பொழுது புலர்ந்தது

கிழக்கே மலை இருளில் மறைந்திருக்கிறது. அந்தச் சிகரத்திலே ரியோதயம் ஆகும் இயற்கை யற்புதத்தைப் பார்த்துப் பார்த்து அனுபவிக்க வண்டும். சரி; நாம் பார்க்கிறோமா? அது நம்மைப் பார்க்கிறதா? இரு ழ்கிய போர்வையைச் சிறிது விலக்கிக் கொண்டு அந்தச் சிகரத்திலிருந்து தோ ஒரு கண்—வானத்தின் கண்—கடவுளின் கண்—நம்மைப் பார்ப்பது பாலல்லவா இருக்கிறது? ஆம்; பக்தியும் பய பக்தியும் ஒருங்கே தோன் ம்படி!



சூரியோதயம்

இந்த அற்புதத்தைப் படம் பிடித்துக் காட்டும் கம்பன் பாட்டு எவ்வளவு பீரமாய் உதயம் செய்கிறது கவியுள்ளத்திலே:

> ததையுமலர்த் தார்அண்ணல்
> இவ்வண்ணம் மயல்உழந்து
> தளரும் வேலை,
> சிதையுமனத்(து) இடருடைய
> செங்கமலம் முகமலரச்
> செய்ய வெய்யோன்,
> புதைஇருளின் எழுகின்ற
> புகர்முகயா னையின்உரிவைப்
> போர்வை போர்த்த
> உதயகிரி எனும்கடவுள்
> நுதல்கிழித்த விழியேபோல்
> உதயம் செய்தான்.

[ததையும்—நெருங்கும். தார்—மாலை. அண்ணல்—(இங்கே) புருஷோத் ணுகிய ராமன். மயல் — மயக்கம்; (இங்கே) காதல் மயக்கம். உழந்து — நுந்தி. வேலை—வேளை. செங்கமலம் — செந்தாமரைப்பூ. செய்ய—சிவந்த. வெய்யோன் — சூரியன். புதை — புதைந்த; ஆழ்ந்த. புகர் — செம்புள்ளி. ரிவை — தோல். கடவுள் — (இங்கே) சிவபெருமான். நுதல் — நெற்றி.]

3—3112

சூரியன் உதயமாகும் உதயகிரி இருளில் மறைந்திருக்கும்போது, யானைத் தோலைப் போர்வையாகப் போர்த்துக் கொண்டிருக்கும் சிவபெருமானைப் போல இருந்ததாம். இருளின் சக்திகளைக் கோபித்து, அந்தப் பெருமானின் நெற்றிக் கண் பளிச்சென்று திறந்ததுபோல் இருக்கிறதாம் அந்தச் சிகரத்திலே சூரியோதயம்.

காதல் - நாடகம்

சூரியோதய காலத்திலே தாமரை முகம் மலரத் தடாகங்கள் அகம் மலர்ந்து பொலிகின்ற அழகைப் பார்க்கும்போது, காதலனைப் பிரிந்து சந்திக்கும் காதலியின் முகமலர் நினைவிற்கு வருகிறது: கவிஞன் ஒரு காதல்-நாடகத்தை நம் கண்முன் கொண்டு வருகிறான்.

பழைய தமிழ் நாகரிகத்திற்குப் பொருத்தமான காதல் - நாடகம் :

> **பண்டுவரும் குறிபகர்ந்து,**
> **பாசறையில், பொருள்வயினிற்**
> **பிரிந்து போன**
> **வண்டுதொடர் நறுந்தெரியல்**
> **உயிரனைய கொழுநர்வர,**
> **மணித்தே ரோடும்**
> **கண்டு,மனம் களிசிறப்ப,**
> **ஒளிசிறந்து மெலிவகலும்**
> **கற்பி னார்போல்,** 186
> **புண்டரிகம் முகமலர**
> **அகமலர்ந்து பொலிந்தனபூம்**
> **பொய்கை யெல்லாம்.**

[பண்டு — முன்னமே. வரும்குறி — திரும்பி வரும் காலத்தின் அடையாளம். பாசறை — போர் செய்யச் சென்றவர் தங்கும் இடம். வயினின் — இடத்தில்; காரணமாக. நறுந்தெரியல் — நல்ல மணமுள்ள பூமாலை. புண்டரிகம் — தாமரை. பூம்பொய்கை — அழகிய நீர்நிலை.]

போர் புரிவதற்கோ, பொருள் தேடுவதற்கோ போயிருந்தாராம் காதலர். தாம் திரும்பிவரும் காலத்தையும் குறித்துச் சொல்லிப் போயிருந்தாராம். தலைவியர் நாள்களை எண்ணிக்கொண்டிருந்தார் என்று சொன்னால் போதுமா? நிமிஷத்தையே யுகமாக எண்ணிக் கொண்டிருந்தார் என்று சொல்ல வேண்டும். அதனால்தான், காதலர் பிரிந்துபோன காலம் ஏதோ ஒரு பண்டைக் காலம் (பண்டு) போலத் தோன்றுகிறது.

இப்படி யிருக்கும்போது கொழுநர் திடீரென்று திரும்பி வருகிறார். மார்பும் தோளுமாக வந்து சேருகிறார் ஜில் என்று. மணிகள் கட்டிய தேரிலே ஜம் என்று வந்து விட்டார் வீட்டுக்கு அருகிலேயே. 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே'' என்று சொல்லுகிறது போலே கணகண வென்று அந்த மணிகள் அடிக்கும் சத்தம் முன் கூட்டியே வந்து காதலியின் காதில் விழுகிறது.


ஓடிவந்து பார்த்தால் யானை யில்லை, வேறு விசேஷமில்லை. உயிர் பிரிந்த உடலிலே அந்த உயிர்தான் திரும்பி வந்து சேர்ந்தது என்று சொல்லும்படி வந்து சேருகிறார் அன்பர். அந்த வெற்றி மாலையைப் பார்த்ததும், "வெற்றியோடு வந்து விட்டார்'' என்று தெரிந்து விடுகிறது. அந்த மணித் தேரை

பார்த்ததுமே பளிச்சென்று தெரிந்து விட்டது, "ஆசாமி செல்வம் தேடி வந்து விட்டார்" என்பதும்!

அந்த முகத்தைக் கண்டதும் காதலி மனத்தில் களிப்பு—ஆனந்த வெறி—நிறைந்து பொங்குகிறது. உடனே முகத்திலும் உடம்பிலும் ஒளி சிறந்து வீசுகிறது.

இத்தகைய காதலிபோல், தாமரையாகிய முகம் மலரத் தடாகங்க ளெல்லாம் அகம் மலர்ந்து பொலிகின்றனவாம் சூரியோதயத்திலே.

என்ன அழகான காதல் நாடகம், ஆனந்தமான காலை வேளையில்! பண்டைத் தமிழிலக்கியத்தின்—அதாவது சங்க நூல்களின்-காதற் பாடல்களெல்லாம் கனிந்து தந்த ஓர் "ஆசையின் கனி"யோ என்று சொல்லும்படி அமைந்திருக்கிறது இந்தக் காலைப் பாட்டு. சங்க இலக்கியத்திலே வீசும் 'இயற்கை மணம்' இங்கே தான் உலகம் போற்றும் உத்தமக் கவிதையாகப் பரிமளிக்கிறது. சங்கத் தமிழில் காணப்படாத இசை நலமும் செளந்தரிய



உணர்ச்சியோடு கலந்து பொங்குகிறது, காலை வேளையில் ஒளியோடு இளமை கொஞ்சுவது போல.

இயற்கையின் ஆனந்தக் கூத்து

பால சூரியனது பொற்கதிர்கள் எங்கும் விரிந்து பரவி வருகின்றன. தெய்விகமான காட்சி:

என்னரிய மறையினொடு
கின்னரர்கள் இசைபாட,
உலகம் ஏத்த,
விண்ணவரும் முனிவர்களும்
வேதியரும் கரங்குவிப்ப,
வேலை யென்னும்
மண்ணும்மணி முழவதிர
வானரங்கில் நடம்புரிவான்
இரவி யான
கண்ணுதல்வா னவன்கனகச்
சடைவிரிந்தால் எனவிரிந்த
கதிர்க ளெல்லாம்!

[ஏத்த — துதிக்க. விண்ணவர் — தேவர். வேலை — சமுத்திரம். மண்ணும் மணி முழவு — பதமாக அமைந்து, (நீல) ரத்தினங்களால் அலங்கரித்த முரசு. வான் அரங்கு — வானமாகிய நடனமேடை. வான் — ஒளி. இரவி — சூரியன். கண்ணுதல் வானவன் — நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான். கனகச் சடை — பொன்னிறமான சடைகள். கதிர் — கிரணம்.]

சிவபெருமான் கீழ்வானத்தை நடன மேடையாகக் கொண்டு கூத்தாடுவது போலவும், அந்தச் சிவ சூரியனது பொன்னிறச் சடைகள் நாலு திசையிலும் விரிந்து விழுந்து சூரிய கிரணங்களாக ஓடி வருவது போலவும் தோன்றுகிறதாம். அப்போது நீலக் கடல் நீலரத்தினங்களால் அலங்கரிக்கப் பெற்ற ஒரு பெரு முரசு முழங்குவது போல் முழக்குகிறதாம்.

ஆனந்த நடராஜாவின் சன்னிதியிலே முனிவரும் வேதியரும் கைகுவித்து ஆனந்தமாக நிற்பதுபோல் உதய சூரியனுக்கு முன்பு நின்று அஞ்சலி செய்கிறார்கள். நடராஜாவைத் தேவர்களும் வணங்குகிறார்கள்; கின்னரர்களும் இசைபாடித் துதிக்கிறார்கள்; வேதங்களும் பண்பாடிப் புகழ்கின்றனவாம். சூரியோதயத்தையும் எவ்வளவு ஆனந்தமாக மண்ணும் விண்ணும் ஒருங்கே கொண்டாடுகின்றன!

இந்தப் பாடல்களிலே இயற்கை அற்புதமாகிய சூரியோதயம் எவ்வளவு அற்புதமாய் — எவ்வளவு கம்பீரமாய்ப் பிரதிபலிக்கிறது! இவை கல்வித் திறமையால் விளைந்த கவிதையல்ல. 'இயற்கைக் கவிஞர்' என்று சொல்லக் கூடிய கவிஞர்களுக்கு இளநகையும் இசைக் குரலும் காட்டிக் கருணை புரியும் இயற்கை, தன் ஆனந்தக் கூத்தையே காட்டி விடுகிறது கம்பனுக்கு. இந்தச் சூரியோதயம், இந்த வீர காவியத்தின் (மூல சுருதியாகிய) கம்பீர நாடகப் பண்புடன் இசைந்து, எப்படிக் கதையோடு கலந்து பிரகாசிக்கிறது, பாருங்கள்!

* * *

ஜனகனுடைய மாளிகை ஒன்றின் மேல்மாடத்திலே ராமன் சீதையை எண்ணி எண்ணி மயங்குவதும் வருந்துவதுமாய்த் தளர்ந்து படுத்திருக்கிறான். வழக்கமாய்ப் பொழுது புலர்வதற்கு முன்பே துயில் உணர்ந்து எழுந்திருக்கக் கூடியவன் இன்று இன்னும் எழுந்திருக்கவில்லை.

சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ.

54. "வில்லும் காண்பார்!"

இரவெல்லாம் உறக்கம் பிடியாமல் கழிந்து விட்டது. ஆகையால் ராமன் பொழுது புலர்ந்தது கூடத் தெரியாமல் அயர்ந்து மயங்கிக் கிடந்தான். சூரியோதயமாகி அந்த இளங் கதிர்கள் தன்மீது பட்ட பிறகுதான் விழித்துக் கொண்டரன். பால சூரியனே தன் இளங் கரத்தால் அடி வருடி—மெல்லக் கால் பிடித்துத் தடவி—துயில் உணர்த்துவது போல் இருந்ததாம்.

கொல்ஆழி நீத்(து) அங்கோர்
குனிவயிரச் சிலைதடக்கைக்
கொண்ட கொண்டல்,
எல்ஆழித் தேர்இரவி
இளங்கரத்தால் அடிவருடி
அனந்தல் தீர்ப்ப,
அல்ஆழிக் கரைகண்டான்,
ஆயிரவாய் மணிவிளக்கம் 128
அழலும் சேக்கைத்
தொல்ஆழித் துயிலாதே
துயராழி நெடுங்கடலுள்
துயில்கின்றானே!

[கொல் ஆழி—(துஷ்டரைக்) கொல்லும் சக்ராயுதம். நீத்து — நீக்கி. குனி — வளைகிற. வயிரச் சிலை—வயிரம்போல் உறுதியான வில். தடக்கை — பெரிய கை. கொண்டல்—மேகம்; இங்கே மேகம் போன்ற ராமன். எல் — ஒளி. ஆழி - சக்கரம்; (இங்கே) சூரியனது தேரின் ஒற்றைச் சக்கரம். ..வி - சூரியன். கரம்-(கிரணங்களாகிய)கைகள். அனந்தல் - உறக்க மயக்கம். ..ப்ப - தீர்க்க. அல்ஆழி - இரவாகிய சமுத்திரம். மணிவிளக்கம் - மாணிக்க..ம். சேக்கை - படுக்கை. தொல் ஆழி - பழமையான கடல்; இங்கே ..ற்கடல். துயராழி - துயரக் கடல்.]

பெரியோரைத் துயில் உணர்த்த விரும்புகிறவர்கள் சத்தம் போட்டு எழுப்பக் கூடாது; உடம்பைப் பிடித்துக் குலுக்கியும் எழுப்பக் கூடாது; கால் பிடித்து வருடித் துயிலெழுப்ப வேண்டும்—என்பது நமது இந்து தேசத்தில் ஒரு பழமையான பண்பாடு. இந்த முறையிலேதான் உதய சூரியனும் இன்று ராமனைத் துயிலெழுப்புகிறானும்.

ஆனால், உறங்கிக் கொண்டிருந்தவன்தானே விழித்துக் கொள்ள முடியும்? ராமன் உண்மையாக உறங்கவே யில்லையாம். பாற்கடலிலே பள்ளி கொண்டிருந்தவன் இப்போது துயரக் கடலிலேதான் பள்ளிகொண்டிருந்தானும்.

* * * *

கண் விழித்துச் சூரியனைக் கண்டதும் இரவாகிய சமுத்திரத்திற்கும் எப்படியோ கரைகண்டு விட்டோமே! — என்று நினைக்கும்படி யிருக்கிறது ராமனுக்கு.

ஒருவரை ஒருவர் பிரிந்த காதலர்களுக்கு ஓர் இரவே எத்தனையோ யுகங்கள் போலக் கழிகிறதல்லவா? ராமனுக்கும் யுகம் கழிந்தது போல் இரவு கழிந்தது. ராமன் எப்படி எழுந்திருக்கிறான், பிறகு என்ன என்ன செய்கிறான் — என்பதைப் பின் வரும் கவிதைக் கண்ணாடியிலே பார்த்துக் கொள்ளலாம்.

ஊழிபெயர்ந் தெனக்கங்குல்
ஒருவண்ணம் புடைபெயர,
உறக்கம் நீத்த
சூழியா னையின்எழுந்து,
தொல்நியமத் துறைமுடித்துச்
சுருதி அன்ன
வாழிமா தவற்பணிந்து,
மனக்(கு)இனிய தம்பியொடும்,
வம்பின் மாலை
தாழுமா மணிமௌலித்
தார்ச்சனகன் பெருவேள்விச்
சாலை சார்ந்தான்.

18

[ஊழி — யுகம். பெயர்ந்தென — கழிந்தாற்போல. கங்குல் — ராத்திரி. ஒருவண்ணம் — ஒருவாறாக. புடை பெயர — தன் நிலையில் நின்று நீங்க. நீத்த — நீங்கிய. சூழி — முகபடாம். தொல் — பழைய. நியமத் துறை — நித்திய நியமங்களின் வகைகள். சுருதி — வேதம். அன்ன — ஒப்பான. மாதவற் பணிந்து — மகாதபஸ்வியான விச்வாமித்திரனைப் பணிந்து. மனக்கு இனிய — மனத்திற்கு இனிய. வம்பு — வாசனை. மௌலி — கிரீடம். தார் — மாலை.]

ராமன் எழுந்த அழகும், காலைக் கடன் முடித்து மகரிஷியை வணங்கிய மாதிரியும், அவரோடும் மனத்துக்கு இனிய லக்ஷ்மணனோடும் ஜனக மஹாராஜாவின் யாக சாலைக்குப் போய்ச் சேர்ந்த வைபவமும், ஏதோ ஒரு சமமான முறையில் படம் பிடித்தது போல நம் கண்முன் வருகின்றன. இந்த விருத்தத்தின் கம்பீரமான ஓசையே ராமன் கம்பீரமாக எழுந்ததையும் பணிந்ததையும் நடந்ததையும் எப்படியோ பிரத்தியக்ஷமாக்குவது போல

தோன்றுகிறது. ரத்தினக் கிரீடமும் பூமாலையுமாக விளங்கும் ஜனக மஹா ராஜாவையும், அந்தப் பெரிய யாக சாலையையுங்கூட இந்த ஒசைச் சித்திரம் நம் கண்முன் கொண்டு வந்து காட்டுவது போலிருக்கிறது.

*   *   *   *

ஜனக மன்னன் வேள்வியை முடித்துக் கொண்டு கொலு மண்டபத்துக்கு வருகிறான். அந்த விஜயத்தைப் பேசுகின்றனவாம், நாலு திசைகளிலும் சுற்றிச் சுற்றி எதிரொலிக்கும் இடிக் குரலில் முரசுகள். முனிவரும் ராம லக்ஷ்மணர்களோடு கொலு மண்டபத்திற்கு வந்து சேருகிறார்.

அதோ பாருங்கள், அந்த நரேந்திரன் தேவேந்திரன் போல வந்து, திசை எங்கும் வெற்றி பேசும் பேரிகைகளின் இடிக் குரல்களுக்கிடையே வானளாவிய ராஜ மாளிகைக்குள் பிரவேசிக்கும் கோலாகலத்தையும், பிறகு கொலு மண்டபத்திலே வீற்றிருக்கும் மாட்சியையும், அந்த மண்டபத்திலே மகரிஷி ராம லக்ஷ்மணர்களோடு வீற்றிருக்கும் அந்த மகத்தான காட்சியையும்:

முடிச்சனகர் பெருமானும்,
முறையாலே மறைவேள்வி (90
முற்றிச், சுற்றும்



இடிக்குரலின் முரசியம்ப
இந்திரன்போல் சந்திரன்தோய்
கோயில் எய்தி,
எடுத்தமணி மண்டபத்துள்
எண்தவத்து முனிவரொடும்
இருந்தான், பைந்தார்
வடித்தகுனி வரிசிலைக்கை
மைந்தனும்தம் பியும்மருங்கின்
இருப்ப மாதோ.

[முடி—கிரீடம். மறை வேள்வி—வேத மந்திரங்களோடு கூடிய யாகம். முற்றி — முடித்து. சுற்றம்—நாலு திசைகளிலும் எதிரொலிக்கும். இடிக்குரலின் — இடியின் குரல் போன்ற முழக்கத்தை உடைய. சந்திரன் தோய் கோயில் — சந்திரனே பிரியமாக இறங்கி வந்து தோய்வதற்கு இடமான நிலா முற்றத்தோடு கூடிய அரண்மனை. எடுத்த — எடுப்பாகக் கட்டி நிறுத்திய. எண்தவம் — மதிக்கப்படும் தவம். பைந்தார் — பசுமையான மாலை. வரி சிலை—கட்டமைந்த வில். மருங்கு—பக்கம்.]

*　　　*　　　*　　　*

ஜனக மன்னனை எப்படி வசீகரித்து விடுகிறது ராம லக்ஷ்மணர்களின் வீர சௌந்தரியம்! விச்வாமித்திரர்தான், எவ்வளவு பொருத்தமாக அறிமுகப் படுத்துகிறார் அரசிளங்குமாரர்களை! இதோ நேரில் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள், கேட்டுக் கொள்ளுங்கள்:

இருந்தகுலக் குமரர்தமை
இருகண்ணின் முகந்(து)அழகு
பருக நோக்கி,
அருந்தவனை அடிவணங்கி,
'யார்இவரை உரைத்திடுமின்
அடிகள்!' என்ன,
'விருந்தினர்கள்: நின்னுடைய
வேள்விகா ணியவந்தார்;
வில்லும் காண்பார்!
பெருந்தகைமைத் தயரதன்தன்
புதல்வர்'என இவர்தகைமை
பேச லுற்றான்.

[கண்ணின் — கண்களால். முகந்து — மொண்டு. அடிகள் — சுவாமிகளே! காணிய — காணும் பொருட்டு.]

ராம லக்ஷ்மணர்களின் அழகை ஜனகன் இரண்டு கண்களாலும் மொண்டு மொண்டு பருகுகிறான் தாகம் தீர. அந்தக் குறிப்பையும் அறிந்து கொண்டு அவன் கேள்விக்கு விடையளிக்கும் விச்வாமித்திரர், "இவர்கள் விருந்தினர்கள்; உன் வேள்வி காண வந்தார், வில்லும் காண்பார்!" என்று எவ்வளவு நயமாக, மறைவேள்வியோடு மணவேள்வியும் காண வந்திருக்கிறார்கள் என்று சுருக்கச் சொல்லி விளங்க வைக்கிறார்!

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.



55. இவர் குலத்தோர்

"மாட்சிமை தங்கிய தசரதசக்கரவர்த்தியின் புதல்வர்கள்" என்று ராம லக்ஷ்மணர்களை அறிமுகப்படுத்திய விசுவாமித்திரர் அந்தச் சூரிய வம்சத்தின் மகிமையையும் ஜனகமகா ராஜனுக்குச் சொல்லத் தொடங்கினர். குலம் சொல்லிக் கோத்திரம் சொல் வித்தானே கொள்வனை கொடுப்பனை ?

மூல புருஷர்

முதல் முதல் அந்தக் குலத்தின் ஆதி புருஷனும் நீதியின் மூல புருஷனும் சூரிய புத்திரனுமாகிய மனுவை,

ஆதித்தன் குலமுதல்வன்
மனுவினை, யார் அறியாதார்?

என்று குறிப்பிடுகிறார்.

பிறகு அந்த வம்சத்திலே தோன்றிய பிருது சக்ரவர்த்தி தன் பெயரால் பூமியே 'பிருதிவி' என்று பெயர் பெறும்படி ஜனங்களுக்குப் பணி செய்தான்—என்கிறார்.

பேதித்த உயிரனைத்தும்
பெரும்பசியால் வருந்தாமல்,—

[பேதித்த — பல் வகையான பேதங்களோடு கூடிய.]

—ஆட்சி செலுத்திய அந்த மகோபகாரியும் இந்த ராமலக்ஷ்மணர்களுடைய குலத்திலே தோன்றினவன்தான் — என்று உத்ஸாஹமாய்ச் சொல்லுகிறார்.

ஸ்ரீரங்கத்தின் பெருமை

இக்ஷ்வாகு என்ற ராஜ சிரேஷ்டனைக் குறிப்பிடும்போது, அவன்தான் ரிய வம்சத்தினரின் குல தெய்வமான ஸ்ரீரங்கநாதனை அயோத்தியில்

பிரதிஷ்டை செய்தவன் — என்று ஸ்ரீரங்கத்துக்கும் பெருமை கொடுத் விசுவாமித்திரரைப் பேச வைக்கிறான் கம்பன்:

பிணி அரங்க, வினை அகலப்,
பெருங்காலம் தவம்பேணி,
மணிஅரங்க நெடுமுடியாய்!
மலர்அயனை வழிபட்டுப்,
பணிஅரங்கப் பெரும்பாயல்— 192
பரஞ்சுடரை யாம்காண
அணிஅரங்கம் தந்தானை
அறியாதார் அறியாதார்!

[அரங்க—கெட. பேணி—விரும்பிச் செய்து. மணிஅரங்க நெடுமு யாய்—ரத்தினங்களை அழுத்தி அழகாய்ச் செய்த பெரிய கிரீடத்தை உடை ஜனகனே! மலர்அயன்—தாமரை மலரில் வாஸம் செய்கிற பிரம்மதேவ பணிஅரங்கப் பெரும்பாயல்—ஆதிசேஷனுடைய உடம்பாகிய பெரிய பா அணிஅரங்கம்—அழகான ஸ்ரீரங்கம்.]

'ஓம்' என்ற பிரணவத்தின் வடிவமாக இருக்கும் ஸ்ரீரங்க விமானத்திலே சேஷசயனத்தில் பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீரங்கராஜாவை ஆதியில் பிரம் தேவன் தன்னுடைய லோகத்தில் ஆராதித்துக் கொண்டிருந்தானாம். அ மூர்த்தியை இக்ஷ்வாகு மன்னன் பிரம்மனை நோக்கித் தவம் செய்து பெற்று தன் ராஜதானியாகிய அயோத்தியில் பிரதிஷ்டை செய்து கொண்டானாம். இந் ரங்கநாதனை இக்ஷ்வாகு முதல் ராமன் வரையுள்ள சூரிய குல மன்னர்களி இஷ்ட தெய்வமாக இருக்கிறானாம். ராமன் தன் பட்டாபிஷேகத்தின் பின் இந்த மூர்த்தியை விபீஷணனுக்குக் கொடுத்து விட்டானாம். விபீஷண ஸ்ரீரங்க விமானத்துடன் ரங்கநாதனை லங்கைக்குக் கொண்டு போகும்போ இடை வழியிலே உபயகாவேரி மத்தியில் பெருமான் அப்படியே நிலையாக நின் விட்டானாம் விமானத்துடனேயே. இதுதான் 'திருவரங்கம் பெரிய கோயில்'— என்கிறார்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள். இந்தப் பெரிய கோயிலைக் கம்பன் த கவிதையிலும் எவ்வளவு பெருமையோடு, எவ்வளவு அழகாய்ப் 'பிரதிஷ்டை' செய்திருக்கிறான்!

புலியும் மானும் ஒரு துறையில்

பொதுவாக, ராமனுடைய முன்னோர்களின் பெருமையைத் தம்மாலும் அளவிட்டுச் சொல்ல முடியாது என்கிறார், தம்முடைய தவ வலிமையை நன்கு உணர்ந்திருக்கும் விசுவாமித்திரரும். இப்படிச் சொல்லி விட்டு, அரும்பெரு குணங்கள் வாய்த்த அரசர்களுக் கிடையே மாந்தாதாவின் தருமத்தையும் நீதி பரிபாலனத்தையும் நினைப்பூட்டுகிறார்:

கருதரிய பெருங்குணத்தோர்,
இவர்முதலோர், கணக்கிறந்தோர்,
திரிபுவனம் முழுதாண்டு
சுடர்நேமி செலநின்றார்,
பொரு(து)உறைசேர் வேலினாய்! 193
புலிப்போத்தும் புல்வாயும்
ஒருதுறையில் நீருண்ண
உலகாண்டோன் ஒருவன்காண்!

[கருதரிய — கருதுவதற்கும் முடியாத. இவர் முதலோர் — இந்தக் குமாரர்களுடைய முன்னோர்கள். திரிபுவனம், — மூன்று லோகங்கள். சுடர் நேமி — ஒளியையுடைய ஆக்ஞாசக்ரம். பொருது — போர்புரிந்து. வேலி னாய் — வேலாயுதத்தையுடைய ஜனக மன்னனே. புலிப் போத்து — ஆண் புலி. புல்வாய் — கலைமான்.]

புலியும் மானும் ஒரு துறையில் நீர் அருந்தும்படி அரசாண்டானும் மாந்தாதா. இதன் பொருள் என்ன? வலியவர் எளியவரை வாட்டாமல், தற்கால பரிபாஷையில் ஆக்ரமிப்பும் ஆதிபத்திய வெறியுமில்லாமல், மாந்தாதா வின் ஆட்சி நடந்ததாம். கொலை, பகை, பயம் முதலியன அறவே ஒழிந்து, அன்பும் அருளும் தலையெடுத்து நிற்கும்படி, எங்கும் எவரும் தலை நிமிர்ந்து நடக்கும்படி, இந்தச் சக்ரவர்த்தியின் ஆட்சி முறை அமைந்திருந்தது என்பது குறிப்பு. இத்தகைய அரசாட்சி முறையும் நீதி முறையும் திரிபுவன சக்கரவர்த்திகள் என்ற அந்தப் பெருமையையும் வென்று, அத்தகைய பதவிக்கும் ஒரு புதுமாட்சியை அளித்து விட்டனவாம்.



இப்படி மாந்தாதாவின் மாட்சியைப் பிரஸ்தாபித்ததும், சுத்த வீரர்களாய்த் தருமத்தை எங்கும் நிலைநிறுத்துவதையே தொழிலாகக் கொண்ட மற்றச் சூரிய குல மன்னர்களின் ஞாபகமும் வருகிறது. அவர்களில் முசுகுந்த சக்ரவர்த்தியைக் குறிப்பிடுகிறார் விசுவாமித்திரர் :

மறைமன்னு மணிமுடியும்
    ஆரமும்வா ளொடுமின்னப்,
பொறைமன்னு வானவரும்
    தானவரும் பொருப்ஒருநாள்,
விறல்மன்வர் தொழுகழலாய்!
    இவர்குலத்தோன் வில்பிடித்த
அறம்என்ன ஒருதனியே
    திரிந்(து)அமரா பதிகாத்தான்.

194

[மறைமன்னு — வேதவிதி பொருந்திய. ஆரம் — மாலை. பொறை மன்னு — பொறுமை மிகுந்த. தானவர் — அசுரர். பொரும் — போர் செய்யும். விறல் — வலிமை. கழல் — பாதம். அமராபதி — இந்திரனது தலைநகரமாகிய அமராவதி பட்டணம்.]

தேவாசுர யுத்தத்தை உலகத்தின் ஆதிமகாயுத்தம் என்கிறது புராணம். இந்த யுத்தத்திலே முசுகுந்தனும் கலந்து கொண்டானாம். அசுரர்கள் முற்றுகை பிட்டிருந்தார்களாம் தேவ ராஜதானியாகிய அமராவதி பட்டணத்தை. முருகக் கடவுள் தேவசேனாபதியாக வருமளவும் அந்தப் பட்டணத்தைக் காத்து நின்றானாம் முசுகுந்தன், தான் ஒருவனாகவே. வேத விதிப்படி அணிந்துகொண்ட கிரீட ஹாரங்கள் வாளோடு மின்ன, தருமமே வில்லும் பிடித்து வந்தது என்று சொல்லும்படி, அங்கும் இங்கும் எங்கும் தானேயாகித் திரிந்து கொண்டிருந்தானாம். அந்த முசுகுந்தனும் இந்த ராம லக்ஷ்மணர்களுடைய குலத்தினன் — என்கிறார் விசுவாமித்திரர்.

அப்பேர்ப்பட்டவர்களின் குலத்தவர்கள் இந்த ராம லக்ஷ்மணர்கள் என்று கூடச் சொல்லாமல், 'இவர் குலத்தோன், இவர் குலத்தோன்' என்று கூறி வருவது கவனிக்கத் தக்கது. அந்த அரசர்களால் சோபிக்கும் சூரிய வம்சம் இந்தப் புதல்வர்களால் மேலும் ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசிக்கும் என்பது குறிப்பு.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

56. தியாகம்-வீரம்-காதல்

வீரர்களுக்கும் மேலான வீரர்களான ஜீவகாருண்ய மன்னர்களின் ஞாபகம் வருகிறது, ராம லக்ஷ்மணர்களின் குலமுறை சொல்லும் போது, விச்வாமித்திருக்கு. அந்த மன்னர்களில் சிபிச் சக்ரவர்த்தி ஜீவகாருண்ய உலகத்திற்கும் தியாக உலகத்திற்கும் கூடச் சக்ரவர்த்தி தான் என்கிறார்:

இன் உயிர்க்கும் இன்உயிராய்
இருநிலங்காத் தார்என்று,
பொன்உயிர்க்கும் கழலவரை
யாம்போலும் புகழ்கிற்பாம்? 195
மின்உயிர்க்கும் நெடுவேலாய்!
இவர்குலத்தோன், மென்பறவை
மன்னுயிர்க்கும் தன்உயிரை
மாறாக வழங்கினனால்.

[இன் உயிர்—இனிய உயிர். இருநிலம்—பெரிய ராஜ்யம். பொன் உயிர்க்கும்—பொன்னொளியை வெளிப்படுத்தும். கழலவர்—வீரக் கழலுடையவர்கள். புகழ்கிற்பாம்—புகழ வல்லோம். மின் உயிர்க்கும்— மின் வெட்டுவதுபோல் ஒளி வீசும். நெடுவேலாய் — நீண்ட வேலாயுதத்தை உடைய ஜனக மன்னனே. மென்பறவை—மெல்லிய ஒரு பட்சி (இங்கே புறா). மன் - பொருந்திய. மாறு—ஈடு. ஆல்—அசைச் சொல்.]

கருணை விளைத்த தியாகம்

மன்னுயிரைத் தன்னுயிராக மதித்து அரசாண்டார்கள் என்பது ற்ற அரசர்களுக்குப் புகழாயிருக்கலாம்; ஆனால் இந்த அரசர்களை அப் டிப் புகழ்வது சரியன்று என்கிறார் முனிவர். உயிர்கள்மீது சூரிய குலத்

தாசர்கள் கொண்டிருந்த அன்பை அப்படியெல்லாம் மதிப்பிட்டால்
போதாதாம். அவர்களைப் புகழ்வதற்குக் கூட நமக்குத் திறமை கிடை
யாது என்று ஒப்புக் கொள்கிறார் ஜனகராஜ ஸபையிலே. இப்படி ஒப்புக்
கொள்கிறவர் யார்? "என்னைப் போன்ற முனிசிரேஷ்டர்களும்" என்று
தசரத ராஜ ஸபையிலே அவ்வளவு தவச் செருக்கோடு பேசும் அதே விச்வா
மித்திரர்தான். இப்போது எவ்வளவு தூரம் மாறிப் போய்விட்டார் ராம
னோடு பழகிய பின்பு.

ராமனுடைய முன்னோர்களிலும் சிபிச் சக்ரவர்த்தியின் ஞாபகம் வந்த
தும் ஒரே அடியாகத் தாழ்ந்து பேசுகிறார்,—"எந்தத் தபஸ்விக்குத்தான்
அத்தகைய தியாக புத்தி வரக் கூடும்" என்று எண்ணிப் பார்த்தவர்
போலே. ஒரு புறாவுக்காகத் தன் உயிரையே கொடுக்கத் துணிந்த அந்தத்
தியாகமூர்த்தியின் கதை அவ்வளவு தெளிவாக மனக்கண்முன் ஓடிவருகிறது.

ஒரு சிறு புறாவைப் பெரும் பருந்து ஒன்று துரத்தி வருகிறதாம்.
சக்ரவர்த்தி புறாவுக்கு அபயம் அளிக்க, "எனக்கு இரை வேண்டாமா?"
என்று பருந்து வழக்காடுகிறதாம். உடனே சக்ரவர்த்தி அந்தப்
புறாவின் எடை அளவிற்குத் தன் உடம்பிலிருந்து சதையை அறுத்துக்
கொடுப்பதாக உடன்படுகிறான். ஆனால், என்ன ஆச்சரியம்!—உறுப்புக்
களை யெல்லாம் ஒவ்வொன்றாக அறுத்து வைத்தும் தராசுத் தட்டு சமமாக
வில்லை. முடிவில், சக்ரவர்
த்தி தானே அந்தத் தட்டில்
ஏறி நின்று எடையை நிறை
த்துப் பருந்துக்கு விருந்
தாகத் துணிகிறானும்.

இந்த மகத்தான தியா
கக் கதை நமது ஜனங்க
ளின் உள்ளத்தை வசீகரி
த்து விட்டது. வலது பக்



க்திலிருந்து சதையை அறுத்து வைக்கும்போது, இடது கண்ணில் நீர் பெருகியதாகவும், "நீ அழுகிறாய்; சந்தோஷமாய்க் கொடுக்கவில்லை" என்று பருந்து மறுத்ததாகவும், உடனே சிபி, "வலது பக்கத்திற்குக் கிடைத்த பாக்கியம் தனக்குக் கிடைக்க வில்லையே என்று தான் இடது பக்கம் கண்ணீர் வடிக்கிறது!" என்று பதில் சொன்னதாகவும் இந்தக் கதையை மேலும் வளர்த்திருக்கிறார்கள்.

இத்தகைய ஒப்பற்ற கதை கம்பனுள்ளத்தை விசேஷமாக வசீகரித்திருக்க வேண்டும்.

எனவே, கம்பருடைய விச்வாமித்திரர் சிபிச் சக்ரவர்த்தியின் தியாகத்தைப் பணிந்து பாராட்டி, "அவனும் இவர் குலத்தோன்!" என்று பெருமையுடன் பேசுகிறார்.

பெருமுயற்சியும் பெருவீரமும்.

பிறகு லோகோபகாரமான பெருஞ் செயல்கள் செய்த பேரரசர்களில் சமுத்திரத்தைத் தோண்டியதாகப் புராணம் கூறும் சகர குமாரர்களைக் குறிப்பிடுகிறார். பகீரதப் பிரயத்தனம் என்று பெருமுயற்சிக்கு வரம்பாகச் சொல்லுகிறோமே, அந்தக் கங்கை கொணர்ந்த செயற்கருஞ் செயலையும் ஞாபகப் படுத்துகிறார்.



மறுபடியும் வீர மன்னர்களின் ஞாபகந்தான். சந்திரனை வென்ற திலீபன் முதலான மன்னர்களைக் குறிப்பிடுகிறார். அதி வீரனும், சூரியவம்சம் 'ரகு வம்சம்' என்று பெயர் பெறும்படி ஆட்சி புரிந்தவனுமான ரகு மஹாராஜாவின் புகழைக் குறிப்பிடுகிறார். ரகுவின் பெயரால்தானே ராமனுக்கும் ராகவன் என்ற பெயர் பிரசித்தமாயிருக்கிறது!

காதல் விளைத்த வீரம்

அப்பால், ராம லக்ஷ்மணர் பாட்டனை அஜ மஹாராஜாவுக்கே வந்துவிடுகிறார். அந்தப் பேரரசனுடைய வீரம் பெரிதா? அதிர்ஷ்டம் பெரிதா?" என்ற சந்தேகமும் வந்துவிடுகிறது. மந்தரமலையால் பாற்கடலைக் கலக்கியது போல அஜனும் தன் வில் என்ற மலையால் வேந்தர்களாகிய கடலை ஒரு நொடிக்குக் கலக்கிவிட்டானாம். பாற்கடலைக் கலக்கியதும் மகாவிஷ்ணுவுக்கு மகாலக்ஷ்மி கிடைத்தாளல்லவா? அவ்வளவு அதிர்ஷ்டம் இந்த அஜனுக்கும் கிடைத்து விட்டதாம்:

வில்என்னும் நெடுவரையால்
வேந்(து)என்னும் கடல்கலக்கி,
எல்என்னும் மணிமுறுவல்
இந்துமதி என்னும்திருவை,
அல்என்னும் திருநிறத்த
அரிஎன்ன அயன்என்பான்
மல்என்னும் திரள்புயத்துக்(கு)
அணியென்ன வைத்தானே !

[வரை — மலை. வேந்து — வேந்தர். எல் — ஒளி. முறுவல் — புன்சிரிப்பு. திரு — லக்ஷ்மி. அல் — இருள். அரி — விஷ்ணு. அயன் — அஜன். புயம் — தோள்.]

அந்த ஹரியைப் போல் இந்த அஜனுக்கும் ஒரு திருமகள் கிடை[த்]தாளாம். இந்த லக்ஷ்மிக்கு இந்துமதி என்று பெயர். திருமகளைத் திரு[மா]ல் தன் மார்பிற்கு அணியாகக் கொண்டான். அஜனோ தன் வீர[த்] தோளுக்கு அணியாக வைத்துக் கொண்டானும் இந்துமதி என்னு[ம்] திருவை.

இந்துமதியின் சுயம்வரம் காளிதாஸ மஹா கவியின் 'ரகுவம்ச[ம்]' என்ற காவியத்தில் விரிவாகக் கூறப்படுகிறது. அந்தப் பெண்மணி சுயம்வ[ர] காலத்திலே பிற அரசர்களை இகழ்ந்து அஜ மஹாராஜாவுக்கே மாலை சூட்[டி]னள் என்பதும், பொறாமை கொண்ட அரசர் கூட்டம் அஜனைச் சூழ்ந்[து] கொண்டு போர் விளைத்தது என்பதும், அந்தப் போரில் அஜன் அரச[ர்]களை யெல்லாம் ஜயித்து விட்டான் என்பதும் கதைச் சுருக்கம். அந்த[க்] கதையின் ஸாரத்தைக் கிரகித்துக் கொண்டு பாற்கடல் கடைந்[து] அமுதம் தந்தது போல் கம்பனும் 'ஒரே பாட்டில் ஒரு காவியம்' தந்திரு[க்]கிறான்.

வில்லும் கையுமாக, மண மாலையும் கழுத்துமாக, அஜன் தன்னை அ[லை] அலையாகச் சூழ்ந்து கொண்ட அரசர்களைக் கலக்கி அடிக்கும் காட்சி[யி]லிருந்து கதை தொடங்குகிறது — ஒரு நாடகம் போலே. இந்துமதி இ[ந்]தகை அரும்பிப் பார்த்துக்கொண் டிருக்கிறாள், மல்-தொழிலின் வடிவ[ம்] என்று சொல்லும்படி திரண்டு பூரித்த அந்த வீரத் தோள்களையும், அ[ச்]மலைபோன்ற பெரு வில்லையும், தான் அணிந்த மாலையோடு துலங்கும் ம[ா]ர்பையும். இளநகை அதிகரிக்கிறது, அந்த அநாயாஸ வெற்றியைக் கண்[ட]தும். முத்துப்போன்ற தன் பற்கள் சிறிது தோன்றப் பொங்கி வரும் அந்[த] அழகிய புன்சிரிப்பே வெற்றியைத் தரிதப்படுத்தி விடுகிறது எனலாம்.

அந்த ஒளிக் கொள்ளையில் அவளைத் தன் விஜய லக்ஷ்மியாக அஜ[ன்] காண்பதும், உடனே தன் வீரத் தோளுக்கு அணியாக அந்தத் திரு[வை] அவன் அணிந்து மகிழ்வதும் எவ்வளவு ரஸமாக வர்ணிக்கப்படுகின்ற[ன!] என்ன சொற்செட்டு, என்ன பொருட் பெருக்கம் ! என்ன ஓசைவெள்ள[ம்!]

இந்த அஜ மஹாராஜாவின் புதல்வர்தான் இவர்களுடைய தந்[தை]யாகிய தசரத சக்ரவர்த்தி என்கிறார் விச்வாமித்திரர்.

சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ.

57. தசரதன் அல்லது முப்புகழ்

ராமனின் தந்தையாகிய தசரத சக்ரவர்த்தி அஜமகாராஜனின் அருமைப் புதல்வனென்றும் பிரசித்தி பெற்றிருந்தான். இது தசரதனுக்குக் கிடைத்த முதலாவது புகழ்—பிதுரார்ஜிதப் புகழ்.

அயன்புதல்வன் தயரதனை
அறியாதார் இல்லை......

[அயன்—அஜன்.]

என்கிறார் விசுவாமித்திரர்.

சுயார்ஜிதப் புகழ்

ஆதியில் 'அஜபுத்ரன்' என்று பேர் பெற்றிருந்த தசரதன் நாளடைவில் தர்ம வீரத்திலே தந்தையையும் மிஞ்சிவிட்டான். சுயார்ஜிதம் பிதுரார்ஜிதத்திற்கும் மேலே போய் விட்டது.

தசரதனுடைய தர்ம பரிபாலனமும் நீதி பரிபாலனமும் வீரப் பெரும் புகழும் இந்தச் சக்ரவர்த்திக்கு ஒரு தனிப் பெருமை யளித்து விட்டன. எனவே விசுவாமித்திரர் சொல்லுகிறார்:—

துனி இன்றி உயிர்செல்லச்,
சுடர்ஆழிப் படைவெய்யோன்
பனிவென்ற படியென்னப்,
பகைவென்று படிகாப்போன்,

தனுவன்றித் துணையில்லான்,
தருமத்தின் கவசத்தான்,
மனுவென்ற நீதியான்,
மகவின்றி வருந்துவான்.

197

[துனி—துன்பம். ஆழிப் படை வெய்யோன்—சக்ராயுதம் போன்
சூரியன். படி—தன்மை; உலகம். தனு—வில். மகவு குழந்தை.]

இந்தப் பாட்டிலே, தசரத சரித்திரமும் குணநிசயமும், புத்தி
சம்பத்தில்லாமல் வருந்திய வருத்தமும், அதனால் பெருகிய புத்ரவாத்ஸ
லயமும், விதையில் அடங்கிய ஆலமரம்போல் அடங்கியிருக்கின்றன.

தனுவன்றித் துணையில்லான்,
தருமத்தின் கவசத்தான்

—என்ன விகாரமான வாக்கு!



ஒரு படைத் தலைவன் த
படையை நடத்திக் கொண்
போகிறான் ஒரு போர்க்களத்
நோக்கி. வழியிலே மழை வந்
விட்டது. படை வீரர்கள் க
வுளைத் தொழ ஆரம்பித்தார்கள்
அப்போது தலைவன் சொன்
னும்,—“கடவுளை நம்புங்கள்
ஆனால், வெடி மருந்தை நனைய
மல் காப்பாற்றுங்கள்!” என்ற
தருமத்தின் கவசமாக இரு
கும் தசரதன் “தருமம் தலைகா
கும்” என்று நம்பி யிருந்தவ
தான்; எனினும் வில்லைத் தவி
வேறு துணையை நாடவில்
யாம்.

கடவுளையோ தருமத்தையே
நம்புகிறவன் தன்னையும் நம்
வேண்டும். தன்னம்பிக்கை
யும் தன்முயற்சியையும் கை வி
வது தவறு. வெடி மருந்
நனையாமல் காப்பாற்றும் பொற
பையும் கடவுள் தலைப் பாரமாக்
விடலாகாது என்பதை மேலே
சொன்ன படைத்தலைவ
உணர்ந்திருந்தது போல், கம்
னுடைய தசரதனும் உணர்
ருந்தான் என்பது குறிப்பு.

தசரதனைத் “தருமத்தின் க
சத்தான்” என்றும், “ம
வென்ற நீதியான்” என்ற
சொல்லி விட்டு, “மகவின்
வருந்துவான்” என்று முடி

பது, அந்தப் பழைய துன்பக் கதையை எவ்வளவு உருக்கமாக நமது மனக் கண்முன் மீண்டும் கொண்டு வருகிறது!

கலைக்கோட்டு முனிவரிடம், "புதல்வரை அடையும்படி அருள் செய்ய வேண்டும்" என்று தசரதன் வேண்டிக் கொள்ளும் அந்தச் சந்தர்ப்பத்தையும் உருக்கமாக எடுத்துக் கூறுகிறார் விசுவாமித்திரர். "எனக்குப் பின்பும் தருமமும் நீதியும் நிலைத்திருக்கும்படி ராஜ்யம் காத்தற்கு உரிய புதல்வர் வேண்டும்" என்றுதான் கேட்டானாம் தசரதன். அந்தப் பெருந்தன்மையை ஜனகமன்னன் உள்ளத்திலே எவ்வளவு அழகாய்ப் பதிய வைக்கிறார் விசுவாமித்திரர்:

"தார்காத்த நறுங்குஞ்சித்
தனயர்கள், என்தவ
மின்மை,
வார்காத்த வனமுலையார்
மணிவயிறுவாய்த்திலரால்;
நீர்காத்த கடல்காத்த
நிலம்காத்தேன்; என்னிற்
பின்
பார்காத்தற்(கு) உரியாரைப்
பணிநீ" என்(று) அடி
பணிந்தான்.

[தார் காத்த நறுங்குஞ்சி-பூமாலையை அணிகிற மணமுள்ள முடி. இன்மை - இன்மையால். வார்-கச்சு. வனம்-வனப்பு. என்னின் பின்-எனக்குப் பின்பு. பார்-நிலவுலகம்; (இங்கே) ராஜ்யம். பணி - அருள் செய்வாயாக.]



"பூச் சூட்டிப் பார்க்கப் பிள்ளையில்லையே!" என்று வருந்தினார்களாம் தசரதன் தேவியர். "அதற்கு நாங்கள் தவம் செய்தோமில்லை!" என்றுதான் அவர்கள் எண்ணியிருப்பார்கள். சாதாரணமான கணவர் என்றால் அந்த நிலையில் தாமும் அப்படியே நினைத்து, "ஆமாம், புத்திர பாக்கியமில்லாத மலடிகள்" என்று மனைவிமாரைத்தான் குறை கூறியிருப்பார்கள். தசரதனுடைய பெருந்தன்மையோ அப்படி நினைப்பதற்கும் சொல்வதற்கும்

இடங்கொடுக்கவில்லை. தன் மனைவியரது அந்தக் குறைக்கும் தன் தவமின்மையே காரணம் என்று தன்னையே நொந்து கொண்டானும் தசரத சக்ரவர்த்தி.

இத்தகைய பெருந்தன்மை, தனக்குப்பின் ஜனங்கள் ஒரு காவலன் இல்லாமல் கஷ்டப்படுவார்களே யென்றும் நினைக்கச் செய்தது. ஆகவே, கலைக்கோட்டு முனியை நோக்கி, "நான் என்னால் இயன்ற வரையில் இந்த நிலத்தைக் காத்துவருகிறேன். எனக்குப் பின் தேசக் காவலுக்கு உரியவரை அருள் செய்யவேண்டும்" என்று பிரார்த்திக்கிறான். என்ன நாட்டுப் பற்று, என்ன நாட்டுக் கவலை!

தசரதன் நிலங்காத்த அந்தக் காவல்தான் எவ்வளவு அதிசயமானது!

நீங்காத்த கடல்காத்த
நிலம் காத்தேன்......

என்ற வாக்கிலே தன்னை அறியாமலே வெளிப்படுகிறது அந்தக் காவலின் அருமை. தண்ணீர் கடலைக் காப்பாற்றுவது போல, கடல் நிலத்தைக் காப்பாற்றுவதுபோல, நிலத்தை அரசன் காப்பாற்ற வேண்டுமாம். அப்படித் தசரதன் காவல் செய்தான் என்பது குறிப்பு.

இத்தகைய ராஜ்யக் காவலைத் தசரதன், உரிமையாக வற்புறுத்துவதாகத் தோன்றவில்லை; கடமையாகவும் கருதுவது போலத் தோன்றுகிறது. கலைக்கோட்டு முனிவரை நோக்கி,

பார்காத்தற்(கு) உரியாரைப்
பணிநீ.

என்று வேண்டிக் கொள்ளும்போதும், நிலங்காக்கும் கடமையும் கைங்கரியமுமே உரிமையாக வற்புறுத்தப்படுகின்றன. ராஜ்ய ஆட்சியையும் கைங்கரியத்திற்கு ஒரு சந்தர்ப்பமாகக் கருதும் இந்தப் பெருந்தகைமையை என்னென்பது!

புதல்வராலும் புகழ்

இவ்வளவு பெருந்தகைமையையும் நினைத்துத்தான் விசுவாமித்திரர் ஆரம்பத்திலேயே,

பெருந்தகைமைத் தயரதன்தன்
புதல்வர்

என்று குறிப்பிட்டார் ராம லக்ஷ்மணர்களை. எனினும், இத்தகைய தந்தைக்கும் ஒரு தனிப் பெருமையை—ஒரு தனிப் பெருஞ் சிறப்பை—அளித்திருக்கிறதாம் இந்தப் புதல்வர்களின் பெருமை. தந்தையால் வென்ற புகழை வென்றது தசரதனுடைய சொந்தப் புகழ். இதையும் வெல்லப் போகிறது தனயரால் கிடைக்கும் புகழ் என்பது குறிப்பு.

இதனால்தான் கலைக்கோட்டு முனிவரும், "இந்த ராஜ்யம் மாத்திரமா? — இந்த உலகம் மாத்திரமா? — எல்லா உலகங்களையும் இனிது காக்கும் குமாரர்களைத் தருகிறேன்" என்று வாக்களித்தாராம்.

அவ்வுரைகேட்(டு) அம்முனியும்
அருள்சுரந்த உவகையனாய்,
இவ்வுலகம் அன்றியே
எவ்வுலகும் இனிதளிக்கும் 199
செவ்விஇளஞ் சிறுவர்களைத்
தருகின்றேன்!

[செவ்வி - அழகு.]

என்று, எவ்வளவு உத்ஸாகமாய்த் தசரதனுக்கும் விசேஷப் புகழ் தரக்கூடிய சிறுவர்களைத் தருவதாகச் சொல்லுகிறார்!

இம் முப்புகழும் தசரதனுக்கு முழுப் புகழாகும்.

சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ.

58. பிறந்ததும் வளர்ந்ததும்

பரம்பரைப் பெருமையிலும் சொந்தப் புகழிலும் தசரதன் தன் முன்னோர்களை வென்றுவிடுகிறான் என்பதில் கூடச் சந்தேகம் ஏற்படலாம். ஆனால் ராமனைப் பெற்ற புகழ் என்ற மூன்றாவது புகழ் தசரதனுக்கே உரியது, ஏகபோகமாக. இத்தகைய ராமன் பிறப்பு ஜனகனுடைய மனோபாவத்தை விசேஷமாக வசீகரிக்கும்படி விச்வாமித்திரனால் வர்ணிக்கப்படுகிறது.

தீவினை செய்த தீவினையாலும், அறம் செய்த அறத்தாலும் ராமன் தோன்றியிருக்கிறானாம். இப்பேர்ப்பட்ட மாப்பிள்ளையின் பேரழகையும் ரஸமாகக் குறிப்பிடுகிறான் முனிவன் :

விரிந்திடு தீ வினைசெய்த
வெவ்விய தீ வினையாலும்,
அருங்கடையில் மறை அறைந்த
அறம்செய்த அறத்தாலும்,
இருங்கடகக் கரதலத்(து)இவ்
எழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க்
கவுசலையென் பாள்பயந்தாள்.

[வெவ்விய: கொடிய. அருங்கடையில்: அருமையான கடைசிப் பகுதியில். மறை — வேதம். அறைந்த — முழக்கிக் கூறிய. இருங் கடகம்— பெரிய கைவளையல். கரதலத்து — கைகளையுடைய. எழுதரிய—சித்திரத்தில் எழுதவும் முடியாத. பயந்தாள் — பெற்றாள்.]

தீவினை விரிந்து பரவிய போதிலும் அதைக் குறித்து அஞ்சவேண்டாம் என்பதும், அது அவ்வளவு கொடுமையாகப் பரவுவதே அதன் அழிவுக்குக்

காரணமாகும் என்பதும் குறிப்பு. அப்படியே அறம் கஷ்டப்படுவதைக் குறித்தும் கவலைப்பட வேண்டியதில்லை; முடிவான வெற்றி அறத்துக்குத் தான். இத்தகைய அறமும் வெற்றியும் வேதங்களின் முடிவாகப் பிரஸ்தாபிக்கப் படுகின்றன என்பதும் குறிப்பு.

*　　　*　　　*　　　*

ராமனுடைய சகோதரர்களைக் குறித்துப் பிரஸ்தாபிக்கும்போது பரதனுக்கும் ஏறக்குறைய ராமனுக்குச் சமமாகப் பெருமை கொடுத்துப் பேசுகிறான் விச்வாமித்திரன். ராமனைத் 'தர்ம ஸமுத்திரம்' என்று குறிப்பாகக் கூறியவன் பரதனை 'நியாய சமுத்திரம்' என்று வெளிப்படையாகக் கூறுகிறான்:

தள்ளரிய பெருநீதித்
　　தனியாறு புகமண்டும்
பள்ளமெனும் தகையானைப்,
　　பரதனெனும் பெயரானை,
எள்ளரிய குணத்தாலும்
　　எழிலாலும் இவ்விருந்த
வள்ளலையே அனையானைக்!
　　கேகயர்கோன் மகள்பயந்தாள்.

(தள்ளரிய — தள்ளமுடியாத. தனிஆறு — ஒப்பற்ற நதி. தகை — தகுதி. எள்ளரிய — எவராலும் இகழ்வதற்கு முடியாத. எழில் — வளரும் அழகு. இவ் இருந்த — இவ்விடத்தில் இருந்த. அனையானை — போன்றவனை. கேகயர்கோன் மகள் — கைகேயி.)

201



பெரிய பெரிய நியாயங்கள் என்ற பேராறுகள் எத்தனையோ வந்து விழுந்த போதிலும் அத்தனை ஆறுகளை நிரம்ப உண்டும் (மண்டியும்), பள்ளம் பள்ளமாகவே இருக்கிறதாம். அந்தப் பள்ளத்திற்குத்தான் பரதன் என்று பெயர் — என்கிறான் விச்வாமித்திரன். அந்த 'நீதி ஸமுத்ரம்' இதோ இருக்கும் அறத்தின் மூர்த்திக்கு ஒப்பாக விளங்குகிறான்: ரூப ஸௌந்தர்யத்தில் மட்டும் அல்ல, குண ஸௌந்தர்யத்திலுங் கூட — என்கிறான் முனிவன்.

இத்தகைய ஒற்றுமை இருந்தும், ராமனிடம் தர்ம உணர்ச்சி அதிகமாயிருந்ததென்றும், பரதனிடம் நீதி-உணர்ச்சி அதிகமாய்க் காணப்பட்டதென்றும் சொல்லி, இந்த இரண்டு சகோதரர்களுடைய சிறப்பியல்புகளையும் வற்புறுத்துகிறான் முனிவன். ராமனுடைய தர்ம-உணர்ச்சி, அவனை நாடு துறந்து காடும் கடலுந்தாண்டி உலகத் துன்பங்களுக்காகப் போராடச் செய்தது. பரதனுடைய நீதி-உணர்ச்சியும் இவனை இருந்த இடத்திலிருந்தே மகத்தான தியாகங்கள் செய்யத் தூண்டியது. இத்தகைய குணாதிசயச் சிறப்புக்கள், இந்த இருவருக்கும் இளமையிலேயே உருப்பெற்று வளர்ந்து வருகின்றன என்பது விச்வாமித்திரன் குறிப்பு.

ராம ஸௌந்தர்யத்தைப் பாராட்டும் செய்யுளைப் போல் பரதனைப் பாராட்டும் இச் செய்யுளும் எவ்வளவு வசீகரமாக அமைந்திருக்கிறது!

* * * *

பிறகு லக்ஷ்மண சத்ருக்னர்களின் ஸௌந்தர்யத்தையும் பராக்கிரமத்தையும் பாராட்டுகிறான் விச்வாமித்திரன். ராமனோடு பரதனை ஒப்பிட்டது போல், லக்ஷ்மணனோடு அயோத்தியிலுள்ள சத்ருக்னனையும் ஒப்பிட்டுப் பேசுகிறான்.



அப்பால் இந்தப் புதல்வர்களின் வித்யாப்பியாசத்தைக் குறிப்பிடு கிறான். இவர்களுக்குத் தசரதன் பெயரளவிலேதான் தந்தையென்று சொல்லி, வசிஷ்டனே சகல கலைகளையும் வேதங்களையும் ஊட்டி வளர்த்த உண்மைத் தந்தை யென்கிறான்.

அந்த ஞானத் தந்தையிடம் ராமன் முதலான சகோதரர்கள் அடைந்த கல்விப் பயிற்சியை எவ்வளவு அருமையாகக் குறிப்பிடுகிறான் :

தலையான பொருளுணர்வில்
கலைமகட்கும் தலைவராய்ச்,
சிலைஆயும் தனுவேதம்
தெவ்வரைப்போல் பணிசெய்யக்,
கலைஆழிக் கதிர்த்திங்கள்
உதயத்தில் கலித்(து)ஓங்கும்
அலைஆழி எனவளர்ந்தார்
மறைநான்கும் அனையார்கள்.

(தலையான — முக்கியமான. சிலை — வில். ஆயும் — ஆராயும். தனுவேதம் — தநுர்வேதம் என்ற வில் வித்தை. தெவ்வர் — பகைவர். கலை ஆழிக் கதிர்த் திங்கள் — கலைகள் நிறைந்த சமுத்திரம் போன்ற கதிர்களோடு கூடிய பூர்ண சந்திரன். கலித்து — ஒலித்து. அலையாழி — அலைகளோடு கூடிய சமுத்திரம்.)

ராமன் முதலான நான்கு புதல்வர்களும் ஆண்டிலும் அறிவிலும் வசிஷ்ட குருகுலத்திலே எப்படி வளர்ந்தோங்கினார்கள் என்பதை எவ்வளவு அதிசயமாய்க் குறிப்பிடுகிறது இந்த விச்வாமித்திர வாக்கு!

குழந்தைகளின் உள்ளத்தை ஒரு கூடையாகவோ, குப்பைத் தொட்டி யாகவோ கருதிப் பலவேறு விஷயங்களாலும் நிரப்பி விடுவதுதான் கல்வி யென்ற வசிஷ்டர் நினைக்கவில்லையாம். வாழ்க்கையில் எதிர்ப்படும் விஷயங் களைச் சோதித்து அறிந்து, அவற்றின் உண்மைப் பொருளை உணர்ந்து ஒழுகும் சக்தியை மாணாக்கர்களுக்கு அளிப்பதுதான் உத்தமமான கல்வி முறை யென்று வசிஷ்டர் கருதியதுபோலத் தோன்றுகிறது.

தலையான பொருள் உணர்வில்
கலைமகட்கும் தலைவராய்,—

—இந்த இளங் குமாரர்கள் விளங்கும்படி செய்துவிட்டதாம வசிஷ்டர் கற்பித்த போதனை முறை.

எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து)
அறிவு

என்றும்,

எப்பொருள் எத்தன்மைத்(து)
ஆயினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து)
அறிவு

என்றும் திருவள்ளுவர் கூறியிருப்பதைத் தான், "தலையான பொருள் உணர்வு" என்ற கம்பன் சுருக்கச் சொல்லி விளங்க வைக்கிறான்.

இந்த விதமாக எப்பொருளிலும் மெய்ப்பொருள் காண்பதில் ராமன் முதலானவர்கள், கலைமகட்கும் தலைவர்கள் என்று சொல்லும்படி அறிவுப் பயிற்சி பெற்றுவிட்டார்களாம், கலைப் பயிற்சி பெற்றிருக்கிறார்களாம்.

இக் கல்விப் பயிற்சிக்கு உடற்பயிற்சியும் இன்றியமையாதது என்பதையும் வசிஷ்டர் உணர்ந்திருந்தார் என்ற குறிப்பு,

சிலைஆயும் தனுவேதம்
தெவ்வரைப்போல் பணிசெய்ய

என்ற விச்வாமித்திர வாக்கில் அடங்கி யிருக்கிறது. ராமன் முதலானவர்கள் வசிஷ்ட குருகுலத்திலே உள்ளத்தைப் பண்படுத்திக் கொண்டதுபோல் உடம்பையும் வில் வித்தை முதலான சாதனங்களால் பண்படுத்திக் கொண்டார்கள்.

அந்தக் காலத்திலே போர்க் கலையின் அதிமுக்கிய அம்சமே வில் வித்தைதான். எனவே இந்த வித்தை 'தநுர் வேதம்' என்று அவ்வளவு உயர்வாக மதிக்கப்பட்டது. இந்த வித்தை ராமன் முதலானவர்களுக்குப் பணி செய்கிறது என்கிறான் முனிவன். அதிலும், பகைவர்களைப் போல் பணி செய்கிறது என்கிறான். தோற்று வந்து அரசர்களிடம் பணி செய்யும் அரசர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாகக் குற்றேவல் செய்வார்களோ, அவ்வளவு ஜாக்கிரதையாகக் குற்றேவல் செய்கிறதாம் இந்தக் குமாரர்களுக்கு இந்த வித்தை.

இப்படி யெல்லாம் உடம்பையும் உள்ளத்தையும் உறுதி செய்து வளர்த்துக் கொண்டவர்கள் எவ்வளவு இயற்கையாகவும் ஆனந்தமாகவும் பயிற்சி பெற்று வந்தார்கள் என்பதைத்தான் வற்புறுத்துகின்றன,

கலைஆழிக் கதிர்த்திங்கள்
உதயத்தில் கலித்(து)ஓங்கும்
அலைஆழி எனவளர்ந்தார்,
மறைநான்கும் அனையார்கள்

203

என்ற பின் அடிகள்.

சமுத்திரத்திலே பூர்ண சந்திரன் உதயமாகிறது. அந்தச் சந்திரனுடைய ஆசை-முகத்தைக் கண்டதும் சமுத்திரத்திற்குத்தான் என்ன குதூகலம்! கடல்மேல் கடலைப் பொழிவது போல் நிலவைக் கொட்டுகிறதாம் சந்திரன். அப்போது சமுத்திரம் 'ஓ!' என்று இரைந்து பொங்கி அலைகளாகிற கைகளைச் சந்திரனுக்கு நேரே நீட்டிக் கொட்டி முழக்குகிறதாம். அந்தகைய சமுத்திரம் போல் ராமன் முதலானவர்களும் வசிஷ்ட குருகுலத்திலே வளர்ந்து வந்தார்களாம்.

* * * *

வசிஷ்டரால் கிடைத்த இந்தக் கல்விதான் விச்வாமித்திரர் கூட்டுறவில் மலர்ந்து பூர்த்தியாகிறது.

சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ

59. வீரப் பிரசங்கம் முடிவு பெற்றது

தசரத ராஜ குமாரர்கள் அறிவோடும் வீரத்தோடும் வசிஷ்ட குரு குலத்திலே வளர்ந்து வந்தார்களே, அந்த வித்தியாப்பியாச முறையைப் பாராட்டிய விச்வாமித்திரன், "அந்தக் குமாரர்களில் ராம லக்ஷ்மணரை என் யாக ரக்ஷகர்களாக அழைத்து வந்தேன்" என்கிறான். அந்தச் சந்தர்ப்பம் அதுவரை இந்தப் புதல்வர்கள் படித்திருந்த படிப்பிற்கு ஒரு பரீக்ஷையாகவும் அமைந்ததாம்.

கடினமான பரீக்ஷை

பரீக்ஷை என்றால் பேனா முனையில் பேப்பரை வதம் செய்து தள்ளும் தற்காலப் பரீக்ஷையா? அம்பு - முனையில் அல்லவா தாடகையின் கொடிய ராக்ஷஸ பலத்தைப் பரீக்ஷிக்க நேர்ந்தது?

ஈங்(கு) ஓவரால், என்வேள்விச்(கு)
இடையூறு கடி(து) இயற்றும்
தீங்(கு)உடைய கொடியோரைக்
கொல்விக்கும் சிந்தையனாய்ப்,
பூங்கழலார்க் கொண்டுபோய் 204
வனம்புக்கேன்! புகாமுன்னம்
தாங்கரிய பேராற்றல் —
தாடகையே தலைப்பட்டாள்!

[ஈங்கு—இங்கே (யுள்ள). கடிது—விரைவாக. பூங்கழலார்—பூவைப் பால் மெல்லிய பாதங்களை உடையவர்கள். புக்கேன்—புகுந்தேன். புகா ன்னம்—புகுந்தவுடனேயே. தாங்கரிய—தாங்க முடியாத. தலைப்பட் ள்—எதிர்ப்பட்டாள்.]

"முதலாவது பரீக்ஷையான கன்னிப்போரே அவ்வளவு கடினமான க்ஷையாக ஏற்பட வேண்டுமா?" என்று முனிவன் இரக்கப்படுவதுபோல மைந்திருக்கிறது இந்தப் பாட்டின் கடைசி அடி.

வந்து விட்டதாம் முனிவனுக்கு. "அந்தக் கொடிய பாலைவனத்திற்கு இந்த இளங் குமாரர்களை இழுத்துக்கொண்டு வந்தோமே!" என்று கூட எண்ணி விட்டானும்.

இந்த உணர்ச்சி — இந்த விச்வாமித்திர ஹிருதயம் — தாடகை வதப் படலத்திலேயே வெளிப்படுகிறது :

எரிந்தெழு கொடுஞ்சுரம்
இனைய(து) எய்தலும்
அருந்தவன், "இவர்பெரி(து)
அளவில் ஆற்றலைப்
பொருந்தினர், ஆயினும்
பூவின் மெல்லியர்;
வருந்துவர் சிறி(து)"என
மனத்தில் நோக்கினன்!

205

[சுரம் — பாலை வனம். இனையது — இத்தன்மையது. அருந்தவன்—அரிய தவத்தையுடைய விச்வாமித் திரன். அளவில்—அள வில்லாத.

அந்த வனத்திலே 'பூவின் மெல்லியர்' என்று இரங்கியதைத் தான் இந்த ராஜ சபை யிலும் ஞாபகப்படுத்திக் கொண்டு, "பூங்கழலார்க் கொண்டு போய் வனம்



புக்கேன் !" என்று அனுதாபத்துடன் 'மனத்தில் சோக்கி' பிரஸ்தாபிக்கிறான்.

தாடகை வதம் கடின்மான பரீக்ஷையென்று முனிவன் நினைத்தான். ராமனுக்கோ அது கடினமாகவும் இல்லை, பரீக்ஷையாகவும் இல்லையாம்.

அலைஉருவக் கடலுருவத்(து)
 ஆண்தகைதன் நீண்டுயர்ந்த
நிலைஉருவப் புயவலியை
 நீஉருவ நோக்(கு)ஐயா !
உலைஉருவக் கனல்உமிழ்கண்
 தாடகைதன் உரம்உருவி,
மலைஉருவி, மரம்உருவி,
 மண்உருவிற்(று) ஒருவாளி !

[ஆண்தகை — புருஷோத்தமனான ராமன். நிலை உருவப் புயவலி — நிலைபெற்ற உருவத்தோடு கூடிய தோள் வலிமை. உருவ நோக்கு — ஊடுருவப் பார். உலை — கொல்லன் உலை. உருவக் கனல் — சிவந்த நிறத்தோடு கூடிய நெருப்பு. உரம் — மார்பு. வாளி — பாணம்.]

என்று ராமன் அடைந்த அந்த அநாயாஸ வெற்றி



யானது ஜனகன் உள்ளத்திலே ஊடுருவிப் பாய்ந்து பதியும்படி செய்து விடுகிறான் விச்வாமித்திரன்.

அழகும் சக்தியும் — வாக்கும்

அழகுக் கடலில் எழுந்த அலைபோல் இருக்கிறதாம் ராமன் உருவம். அழகைப் போல் ஆற்றலும் நிறைந்திருக்கிறது அந்த நீண்டு உயர்ந்த தோள்களிலே. "இந்த வீரத் தோள்களை நீ ஊன்றிப் பார். 'தாடகை என்ன பாடு பட்டிருப்பாள்!' என்று நான் சொல்லாமலே நீ தெரிந்து கொள்ளலாம்" என்கிறான். இந்தப் பீடிகையோடு, தாடகை மார்பை ஊடுருவிப் போன பாணம் வேறு எவற்றையெல்லாம் துளைத்துக்கொண்டு போயிற்று!— என்று அடுக்கிக்கொண்டே போய் ஜனகனைப் பிரமிக்கச் செய்கிறான்.

"இந்த வீர சௌந்தரியத்தை ஊடுருவி நோக்க வேண்டும்; அப்போதுதான் சௌந்தரியத்திலே மறைந்து கிடக்கும் அபார வீரம் புலனாகும்" என்று குறிப்பிடும் முனிவன், "நோக்கு ஐயா!" என்று எவ்வளவு அருமையாகவும் அதிசயமாகவும் ஜனகன் கவனத்தை வசீகரித்துப் பேசுகிறான். ராமனுடைய அழகுப் பிரவாகம் போல், சக்திப் பிரவாகம் போல், பொங்குகிறது அலையலையாக விச்வாமித்திரனது வாக்குப் பிரவாகமும்.

கன்னிப் போரையும் அந்தக் கைவண்ணத்தையும் இவ்வளவு ரஸமாய்ப் பிரஸ்தாபித்தவன், தாடகை புத்திரர்களான சுபாகு மாரீசர்களை ராமன் ஜயித்து யாகரக்ஷணம் செய்ததையும் ரஸமாகவே குறிப்பிடுகிறான். "ஓர் அம்பினொடும் அரக்கியர்களில் அங்கு ஒருவன் போய் வான்புக்கான்!" என்கிறான். ராமன் ஓர் அம்பு போட்டதும் அந்த அம்போடே ஆகாசம் போய்ச் சேர்ந்தானாம் சுபாகு. "மற்றையவன் புக்க இடம் அறிந்திலேன்!" என்று மாரீசன் போன போக்கும் படுவேகமும் தன்னுடைய 'ரிஷி - திருஷ்டிக்'கும் புலனாகவில்லை என்கிறான்.

வேறு வேலை இல்லையா முனிவனுக்கு? அவன் போன இடத்தைத் தேடிக் கொண்டிருந்தால் யாக காரியம் முடிவு பெற்றிருக்குமா? ராமன் கல்யாணம்தான் நிறைவேறுமா? எனவே, "போந்தனன்என் வினை

முடித்தே" — யாக காரியத்தை முடித்துக்கொண்டு அப்படியே இங்கு வந்துவிட்டேன் — என்கிறான் முனிவன்.

முடிவுரை

இப்படி ராமனுடைய 'கை வண்ணம்' சொன்ன விச்வாமித்திரன் 'கால்வண்ண'த்தையும் சொல்லி முடிக்கிறான் :

"கோதமன்தன் பன்னிக்கு
முன்னை உருக் கொடுத்த(து). இவன்
போதுவென்ற(து) எனப் பொலிந்த
பொலன் கழல் – கால் பொடிகண்டாய் !
காதல். என்தன் உயிர்மேலும்
இக்கரியோன் பால். உண்டால் !
ஈ(து) இவன்தன் வரலாறும்
புயவலியும்" என உரைத்தான். 207

[கோதமன் — கௌதம மகரிஷி. பன்னி — பத்தினி. முன்னை உரு — பழைய உருவம். போது — மலர். போது வென்றது — பூவை ஜயித்தது. என — என்று சொல்லும்படி. பொலிந்த — விளங்குகிற. பொலன் — பொன். கழல்கால் — வீரக்கழல் அணிந்த பாதம். கரியோன் பால் — கரு நிறமுள்ள ராமனிடத்தில். உண்டால் — உண்டு.]

ராமனது பாததூளி பட்டதும், அகலிகை 'முன்னை உரு'ப் பெற்று விட்டாளாம். 'அகலிகைக்கு' என்று சொல்லாமல் 'கோதமன்தன் பன்னிக்கு' என்று சொல்வதும் கவனிக்கத் தக்கது. கௌதம பத்தினி யாவதற்கு முன்னிருந்த அந்தக் கன்னி - உருவத்தையே கொடுத்து விட்டதாம் ராமனுடைய பாததூளி. இந்திரனால் கற்பு அழிக்கப்பட்ட அந்த நிகழ்ச்சி அகலிகை வாழ்க்கையிலிருந்து அறவே அழிக்கப்பட்டதாம் ராமன் அருளால். கௌதமர் அவளை அந்த நிலையில் ஏற்றுக்கொண்டது, அப்போது அவளைப் புதிதாகவே கல்யாணம் செய்து கொண்டது போலவே இருந்ததாம்.

இப்படியெல்லாம் ராமனது துஷ்ட நிக்ரஹ சாமர்த்தியத்தோடு சிஷ்ட பரிபாலன சாமர்த்தியத்தையும் பிரஸ்தாபித்த முனிவன், தனக்கு அவன் மேலுள்ள விசேஷ அபிமானத்தையும் வெளியிடுகிறான். அந்த அபிமானத்தைக் 'காதல்' என்றே ஒப்புக் கொள்ளுகிறான்.

எப்படிப்பட்ட காதல்? "கண்ணில் காண்பரேல், — ஆடவர் பெண்மையை அவாவும் (ஆசைப்படும்) தோளினாய்!" என்று ஏற்கெனவே புருஷோத்தமனாகிய ராமனுடைய அழகிற்கு நெஞ்சைப் பறிகொடுத்தவனல்லவா?

* * * *

"வில்லும் காண்பார்!" என்று கம்பீரமாக அறிமுகப்படுத்திய விச்வாமித்திரன், காதலனுடைய வரலாறும் புயவலியும் இது என்று கம்பீரமாய்க் கட்டியம் கூறி முழக்குகிறான். ராமனுக்கு வரலாறும் புயவலியும் ஒன்றே என்பது குறிப்பு. ஏன்? 'வரலாறும புயவலியும் பேரழகும், இது!' என்றே ஜனகன் உணர்ந்து கொள்ளுகிறான்.

சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ

60. மாய வில்

ராமனது அழகைக் கண்ணால் மொண்டு பருகிய ஜனகனுக்கு நீறு பூத்த நெருப்பைப் போல் அந்தப் பேரழகில் மறைந்திருந்த புயவலியையும் விசுவாமித்திரர் காட்ட முயன்றார். ராமனது குல முறையின் மகிமையையும் தம் வாக்கின் மகிமையால் பிரத்யக்ஷமாக்கி விட்டார். உடனே, "என் மகள் தவம் செய்தவள் தான் (நோற்றனள் நங்கையும்)" என்ற எண்ணம் உண்டாகிறது சீதையின் தந்தைக்கு. ஆனால் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் இடையே சிவ தனுசு கிடக்கிறதே!

இந்த நிலையில் என்ன பதில் சொல்லப் போகிறான் முனிவருக்கு அரசன்? "நான் என்ன பதில் சொல்வது? (மாற்றம் யாதுரைப்பது?)" என்றே பதில் சொல்லத் தொடங்குகிறான், — அந்த வீரப் பிரசங்கத்தை.

ஈ(து) இவன் தன் வரலாறும்
புயவலியும்!

என்று முனிவன் முடித்ததும்,

வில்லை நினைத்ததும் மனம் பகீரென்றது. அதை 'மாய வில்' என்கிறான். ராமனைச் சந்திப்பதற்கு முன் அந்த வில்லைக் குறித்து எவ்வளவோ பெருமை பாராட்டியவன்தான். தன் அருமைத் திருமகளை "எனக்குத் தரவேணும், எனக்குத் தரவேணும்!" என்று அரசர்கள் வற்புறுத்தி நெருங்கிய காலத்திலே, "இந்தச் சிவதனுசை எடுத்து வளைத்து நாணேற்றிய வீரனே மணமகனாக உரியவன்!" என்று நியமம் ஏற்படுத்தி யிருந்தான் ஜனகன். வில்லைத் தொடுவதற்கும் அஞ்சினார்கள் அரசர்கள். "இனி இந்த வில்லின் மகிமையால் என் மகளுக்குத் தகுந்த

புருஷன் கிடைப்பான் : இதுவே கந்யாசுல்கம் " என்று மகிழ்ந்திருந்தான். நாளடைவில் மகிழ்ச்சி கவலையாக மாறி வந்தது, — " கந்யா சுல்கம் சீதையை என்றும் கன்னிகையாகவே வைத்துவிடுமோ ?" என்று. ராமனைக் கண்டதும் வரலாறு கேட்டதும், கவலை நடுக்கமாக மாறிவிடுகிறது. " என் மாய வில்லுக்கு நான் தோற்றேன் !" என்று நடுங்குகிறான்.

* * *


ஆனால் அடுத்த க்ஷணத்திலே " என் பெண் பாக்கியவதிதான்!" என்கிறான். அப்படியில்லாவிட்டால் ராமன் வந்து சேர்ந்திருப்பானா ? " ராமனும் பாக்கியசாலியாக இருந்து வில்லில் நாணேற்றுவானானால், சீதையும் பாக்கியவதி தான், தவஞ் செய்தவள்தான் !" என்கிறான். "ராமன் நாணேற்றுவது உண்மையில் எங்களை யெல்லாம் துன்பக் கடலிலிருந்து கரையேற்றுவதாகும் " என்று ஒப்புக்கொள்கிறான்.

இப்படியெல்லாம் ஊஞ்சலாடும் ஜனக ஹிருதயத்தை இதோ பாருங்கள் :

" மாற்றம்யா துரைப்ப(து)? என்
மாய விற்குநான்
தோற்றவா(று)!— என,மனம்
துளங்கு கின்றதால்:
நோற்றனள் நங்கையும்,
நொய்தின் ஐயன்வில்
ஏற்றுமேல், இடர்க்கடல்
ஏற்றும் !" என்றனன்.

[மாற்றம் — பதில். தோற்றவாறு — தோற்ற விதம். துளங்குகின்றது — நிலை கலங்குகின்றது. நோற்றனள் — தவம் செய்தனள். நொய்தின் — லேசாக; விரைவாக. ஐயன் — (இங்கே) அழகனான சிறுவன்.]

208



விரைவாகக் காரிய சித்தி பெறவேண்டும் என்ற ஆசை ஒரு புறம், இந்த அழகன் அதிக சிரமமில்லாமலே — லேசாகவே — வில்லை வளைத்து நாணேற்ற வேண்டுமென்ற ஆசையும் ஒரு புறம், தொனிக்கின்றன ஜனகன் வார்த்தையிலே. ராமனைக் கண்டவுடனே அந்த அழகைப் பருகி வெறி கொண்டவனல்லவா? சீதைக்காக வில் வளைப்பதற்கு 'ஐயன்' வருந்துவதைக் கூட மனம் சகிக்கவில்லையாம்.

நொய்தின் ஐயன்வில்
ஏற்றுமேல்,

என்று ஒரு க்ஷணம் ஜனகன் தயங்கி நிற்பதையும் பாருங்கள்.



"வில்லும் காண்பார்!" என்று விசுவாமித்திரர் உறுதியாகச் சொன்ன அந்தச் சொல்லையும் மறந்து, "நீ உருவ நோக்கு ஐயா!" என்று அவர் காட்டிய அந்தப் புய வலிமையையும் மறந்து, "நாணேற்றுவனேயானல் (ஏற்றுமேல்)" என்று சந்தேக உணர்ச்சியோடு பேசுவதைப் பாருங்கள். ராமன் வில்லை வளைத்து நாணேற்றிவிட்டால், அதுவும் சீதையின் அதிர்ஷ்டம்

தான் !—எல்லாம் அவளுடைய பாக்கியம்தான் !—என்றெல்லாம் தந்தை யுள்ளம், ராமனுடைய புய வலியைக் காட்டிலும் சீதையினுடைய அதிர்ஷ்டத்தைப் பெரிதாகக் கருதுவதுபோலவும் தோன்றுகிறது.

* * *

பிறகு ஜனகன் எதிரே நின்ற ஏவலாளர்களை நோக்கி, "அந்தக் குன்றையொத்த வில்லைக் கொண்டு வாருங்கள் இங்கே" என்று கட்டளையிடுகிறான். உடனே,

நன்றெனா வணங்கினர்
நால்வர், ஓடினர் ;
பொன்திணி கார்முகச்
சாலை புக்கனர்.

[பொன்திணி — பொற்கட்டு அமைந்த. கார்முகச் சாலை — வில் வைத்திருந்த இடம். புக்கனர் — போனார்கள்.]

அந்த வில்லை ஓர் அழகான கட்டடத்தில் பந்தோபஸ்தாக வைத்திருந்தான் என்பது குறிப்பு.

இனி, சிவ தனுசு வந்து சேரும் வைபவத்தைப் பாருங்கள் :

உறுவலி அனைவரும்
ஒத்த மேனியர்,
செறிமயிர்க் கல்லெனத்
திரண்ட தோளினர்,
அறுபதி னாயிரர்,
அளவில் ஆற்றலர்,
தறிமடுத்(து) இடையிடைத்
தண்டில் தாங்கினர்.

[உறுவலி — மிக்க வலிமை. செறி — நெருங்கிய. அளவில் — அளவிட முடியாத. ஆற்றலர் — வல்லமையுடையவர்கள். தறி — தூண். மடுத்து — சேர்த்து. தண்டில் — தண்டுகளிலே.]

விற்சாலைக்குப் போனவர்கள் நால்வர்தான் ; வில்லைச் சுமந்து வருகிறவர்களோ மிகப் பலர் — "அறுபதினாயிரர்" என்கிறான் கவிஞன். இந்தத் தொகையில் ஒரு மோகம். தசரதர் அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆண்டாராம், அவர் மனைவியரும் அறுபதினாயிரம் பேராம், அவருடைய மந்திரிமார்களும் அறுபதினாயிரம் ஆசாமிகளாம். இப்படிக் கதை சொல்லுவதால், சிவ தனுசைச் சுமந்து வந்தவர்களின் தொகையையும் அறுபதினாயிரம் ஆக்கி விடுகிறான்.

இந்த அறுபதினாயிரவரும் சாமானியர் அல்லர், மிக்க வலிமை வாய்ந்தவர்கள். ஒவ்வொருவரும் ஒரு யானைக்குச் சமானமானவராம். "யானையை ஒத்த மேனியர்" என்று கூறுவது கவனிக்கத் தக்கது. அவ்வளவு கரு நிறமும் பெரிய உடலும் படைத்தவர்களாம். அந்த ஆசாமிகளெல்லோரும் ஒரே மாதிரி அச்செடுத்து வார்த்தாற் போன்ற தோற்றம் வாய்ந்தவர்களாம். ஆம் ; மனிதத் தோற்றமில்லை, யந்திரத் தோற்றம் ! அறிவுப் பயிற்சி பெறாதவர்களும் முரடர்களுமான பேர்வழிகள் என்பது குறிப்பு. இவர்கள் தான் அந்த வில்லை லேசாகத் தூக்கி வந்தார்களா ? தூக்க மாட்டாமல் தூக்கி வந்தார்களாம். இடையிடையே தறிகள் அமைத்து அவற்றோடு

நெடுகக் கட்டிய தண்டுகளிலே தோள் கொடுத்துச் சுமந்து வந்தார்களாம். ஒரு பிரம்மாண்டமான வாகனத்தைச் சுமந்து வருவது போலே !

இன்னும் பாருங்கள் இந்த வைபவத்தை !

நெடுநில மகள்முது(கு)
  ஆற்ற, நின்றுயர்
தட நிமிர் வடவரை
  தானும் நாணுற,
இடமிலை உலகெனை
  வந்த(து) எங்கணும்,— 210
கடல்புரை திருநகர்
  இரைத்துக் காணவே !

[நெடுநிலமகள் — நீண்ட பூமிதேவி. முதுகு ஆற்ற — முதுகின் நோவை ஆற்றிக் கொள்ள. தடம் நிமிர் வடவரை — பெரிய நிமிர்ந்த மேரு மலை. புரை — ஒத்துள்ள. இரைத்து — இரைச்சலிட்டு.]

அந்த வில் ஒரே இடத்தில் வைக்கப்பட்டிருந்ததால், அதைத் தாங்கிய நிலமகளின் முதுகு நோவெடுத்து விட்டதாம். இப்போது அந்த இடத்திலிருந்து பணியாளர்கள் வில்லை எடுத்து வந்ததால், அந்த நிலமகள் முதுகாற்றி நோவு தீர்ந்தாள் என்று கருதவேண்டி யிருக்கிறதாம்.

* * * *

நகரவாசிகள் சமுத்திர கோஷம் போல் கூச்சலிட்டுக் கொண்டு வந்து பார்க்கிறார்கள். "வில்லோ?' என்று கூடச் சந்தேகப் படுகிறார்களாம்.

"என் இது கொணர்கென
  இயம்பினான் ?" என்பார் ;
"மன்னவர் உளர்கொலோ
  மதிகெட் டார்?" என்பார். 211

[என் — என்ன ?]

இப்படி யெல்லாம் சொல்லிக் கொண்டே ஒரு பெருங் கூட்டம் மொய்த்து விட்டது, வில் சென்ற இடமெல்லாம்.

மொய்த்தனர் இன்னணம்
  மொழிய, மன்னன்முன்
உய்த்தனர், நிலமுது(கு)
  உளுக்கிக் கீழுற,
வைத்தனர்: "வாங்குநர்
  யாவரோ ?" எனக்
கைத்தலம் விதிர்த்தனர்
  கண்ட வேந்தரே ! 212

[மொய்த்தனர் — மொய்த்திருந்த ஜனங்கள். இன்னணம் — இவ்வாறு. உய்த்தனர் — கொண்டு சேர்த்தவர்களாய். நிலமுதுகு — நிலமகளின் முதுகு. உளுக்கி — சுளுக்கி. வாங்குநர் — வளைக்கப் போகிறவர். விதிர்த்தனர் — நடுங்கினர்.]

* * * *

வில் வெகு காலமாக இருந்த இடத்திலே நிலமகள் வலியெடுத்த தன் முதுகை ஆற்றிக்கொள்ள, இப்போது அதை வைத்த இடத்திலே நிலமகள் முதுகு சுளுக்கிக் கொண்டதாம். இவ்வளவு பயங்கரமாக வைக்கப்பட்ட வில்லைப் பார்த்த வேந்தர்களுக்கே கை நடுங்குகிறதாம்.